


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




திங்கள் ❖ மார்ச். 21, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 165 ❖ ரூ.5

### நமக்கு நாமே திட்டத்தில் புதுக்கோட்டையில் உள்விளையாட்டு அரங்கம்

# கிடப்பில்

## 2018ல் அடிக்கல் நாட்டிய திட்டம் 2022 வரை முடியவில்லை தமிழ்நாடு விளையாட்டு துறை அமைச்சர் மாவட்டத்திலேயே இந்த நிலையா?







புதுக்கோட்டை, மார்.21: புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டு மைதானம் சுமார் 21 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது. தமிழ்நாட்டில் மற்ற மாவட்டங்களை ஒப்பிடுகையில் எந்த மாவட்டத்திலும் இல்லாத சிறப்பான பேருந்து நிலையம் மற்றும் நகரத்தில் உள்ள பெரும்பாலான மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் நகரத்தின் ஒட்டுமொத்த குடியிருப்பு மையப் பகுதியை ஒட்டி அமைந்திருக்கின்றது

இந்த விளையாட்டு மைதானம். இங்கு அதிநவீன பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கம் கட்ட கடந்த அதிமுக அரசு 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 10 ஆம் தேதி ரூபாய் 4.62 கோடி மதிப்பீட்டில் கட்டிட நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்று வந்த நிலையில் 12 மாதத்தில் முடியவேண்டிய பணிகள் நான்கு ஆண்டுகளை கடந்தும் இதுவரை முடிவுக்கு வராமல் கட்டிடப் பணிகளும் நடைபெறாமல் இருப்பது பல்வேறு கேள்விகளை எழுப்பி இருக்கின்றது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்விளையாட்டு அரங்கம் அமையவேண்டும் என்பது ஒட்டுமொத்த மக்களின் எதிர்பார்ப்பாகும் அதற்கேற்றார்போல் நல்ல திட்டங்களுக்கு தொடர்ந்து வாரி வாரிக் கொடுக்கும் வள்ளல்கள் அதிகம் உள்ள மாவட்டம் புதுக்கோட்டை என்பதால் அவர்களின் பங்களிப்பாக ரூபாய் ஒரு கோடி வழங்கப்பட்டு அரசாங்கத்தின் நமக்கு நாமே திட்டத்தின் மூலம் திட்டமும் புதுக்கோட்டைக்கு வந்தது. பணிகளும் தொடங்கியது ஆனால் அந்த சூழலில் தான் உலகத்தையே ஆட்டிப் படைத்துக்கொண்டிருந்த கோவிட் வைரஸ் தாண்டவத்தால் முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது அதனால் கட்டிட பணிகளும் நிறுத்தப்பட்டன. ஒரு வழியாக மீண்டும் பணிகள் தொடங்கின மீண்டும் கோவிட் களம் இறங்கியது கட்டிடப் பணிகள் தடைப்பட்டன இப்படியான சூழலில் உள் விளையாட்டு அரங்கம் கட்டுமான பணிகள் தற்பொழுது கடந்த ஆறு மாதத்திற்கு மேலாக நடைபெறாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளதால் உள் விளையாட்டரங்கம் சமூக விரோதிகளின் கூடாரமாகமாறி இருப்பது மட்டுமின்றி அப்பகுதியில் நடைப்பயிற்சி மேற்கொள்வோருக்கு அச்சுறுத்தல் தளமாகவும் அமைந்திருக்கின்றது.

தமிழ்நாட்டு விளையாட்டு மேம்பாட்டு துறைக்கு தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை சார்பில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனை புதுக்கோட்டை கட்டிட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்ட செயற்பொறியாளர் மேற்பார்வையில் உள் விளையாட்டு அரங்கத்தை M/S.R.P. பெரியசாமி &Co என்ற ஒப்பந்தகாரர் ஒப்பந்தம் எடுத்துள்ளார் தற்பொழுது இறுதியாக இந்த கட்டிடத்தை மேற்கண்ட பெரியசாமியின் மேலாளர் யூகேஸ்வரன் கண்காணித்து வருகிறார். கட்டிடம் கட்ட படாமல் பணிகள் முடியாமல் இருக்க காரணம் என்ன என விளக்கம் பெற யூகேஸ்வரனை புதுகை வரலாறு தொடர்பு கொண்டு கேட்டது. அதற்கு அவர் அளித்த பதிலில், மிகுந்த கனவுகளுடன் உள் விளையாட்டு அரங்கத்தை அமைத்திட புதுக்கோட்டைக்கு வந்தோம் பணிகளை திறம்பட செய்தோம் குறித்த காலக்கெடுவுக்குள் முடிக்காமல் போனதற்கு கொரோனா வைரஸ் பரவல் தான் காரணம், இருப்பினும் தற்போதைய சூழலில் 85 சதவீத பணிகள் முடிந்துவிட்டன எஞ்சிய பணிகள் 15 சதவீதத்தை மூன்று மாதத்திற்குள் நாங்கள் முடித்து விடுவோம். ஆனால் நாங்கள் இதுவரை சுமார் மூன்றரை கோடி ரூபாய்க்கு பணிகளை முடித்து விட்டோம் எங்களுக்கு அரசாங்கத்திலிருந்து ரூபாய் ஒன்றரை கோடி ரூபாய் கூட பணம் வரவில்லை தற்பொழுது ஒரு திட்டத்திற்காக எங்களின் பணம் 2 கோடி ரூபாய் வரை முடக்கப்பட்டு 2 ஆண்டுகளுக்கும் மேலாக பணம் பெற முடியாமல் தவித்து வருகிறோம் என்றார். இவரின் குற்றச்சாட்டு குறித்து பொதுப்பணித்துறையின் உதவி பொறியாளர் பாஸ்கரனை தொடர்பு கொண்டபோது அவர் கூறுகையில்: நமக்கு நாமே திட்டத்தின் மூலம் டி ஆர் டி ஏ அலுவலகத்திலிருந்து ரூபாய் 3 கோடி வரவேண்டும் அந்தப் பணம் வருவதில் தாமதம் ஏற்பட்டதால் ஒப்பந்தக்காரருக்கு பணத்தை வழங்க முடியவில்லை, பணத்தை பெற எங்கள் தரப்பில் முயற்சி செய்து வருகின்றோம் விரைவில் தொகை வந்துவிடும் என்றார் நம்பிக்கையுடன்.

மாவட்ட விளையாட்டு அலுவலர் குமரனை தொடர்புகொண்டு உள் விளையாட்டு அரங்கம் காலதாமதத்திற்கு சரியான காரணத்தை சொல்லுங்கள் என்று கேட்ட போது அவரும் தன்னுடைய பங்குக்கு டிஆர்டிஏ அலுவலகத்திலிருந்து பணம் இதுவரை கிடைக்கவில்லை அநேகமாக பட்ஜெட் கூட்டத் தொடர் முடிவதற்குள் அல்லது ஏப்ரல் மாதத்திற்குள் நிதி கிடைத்துவிடும் பணிகளை முடிக்க வேண்டும் என்பதில் விளையாட்டுத்துறை, பொதுப்பணித்துறை, ஊரக வளர்ச்சி துறை, மாவட்ட நிர்வாகம் அனைத்தும் ஒருமித்த கருத்துடன் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு விளையாட்டு துறை அமைச்சராக இருப்பவர் சிவ.வீ. மெய்யநாதன் அவரின் மாவட்டத்தில்தான் உள் விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு நிதி கிடைக்காமல் பணிகள் முழுமை அடையாமல் உள்ளது. விளையாட்டு வீரர்களின் கனவு மெய்ப்பட உள் விளையாட்டு அரங்கத்தை விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது புதுகை வரலாறின் எதிர்பார்ப்பு.

### மழைக்காலத்தில் விளையாட தடை: நடவடிக்கை எடுப்பாரா அமைச்சர்

புதுக்கோட்டை விளையாட்டு மைதானத்திற்கு மழைக்காலம் வந்துவிட்டால் விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள், பொதுமக்கள் மட்டுமல்ல விளையாட்டுத் துறை அலுவலர்களும் தண்ணீரில் தத்தளித்துக் கொண்டு தான் வரமுடியும் என்றால் நிலைமையை உணர்ந்து கொள்ளுங்கள்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நரிமேடு உள்ளிட்ட பல்வேறு மேட்டுப்பகுதிகளில் இருந்து கீழ்நோக்கி வரக்கூடிய தண்ணீர் அனைத்தும் விளையாட்டு மைதானத்தை ஆக்ரமித்துக் கொள்கின்றன காரணம் தொலைநோக்கு திட்டம் இன்றி குளத்தை அரசாங்கமே ஆக்கிரமிப்பு செய்து தங்களுக்குத் தேவையான அலுவலகங்களை கட்டிக் கொண்டதால் விபரீதம் தற்போது பெரிதாகி விட்டது.

ராமாயணத்தில் வரும் கும்பகர்ணன் கதையைப் போல் ஆறு மாதம் விளையாட ஆறு மாதம் விளையாட முடியாது என்ற நிலை ஆண்டாண்டு காலமாக இருக்கின்றது. அந்த சிக்கலிலிருந்து உள்விளையாட்டு அரங்கம் கட்டுமானப் பணிகள் நடைபெறும்போதே அதையும் தீர்த்துவைக்க துறையின் அமைச்சர் மெய்யநாதன் நடவடிக்கை எடுத்தார் என்றால் அனைத்து தரப்பு மக்களும் அமைச்சருக்கு தங்களின் பாராட்டுகளை தெரிவிப்பார்கள் அதனால் பெரியார் நகர், கம்பன் நகர் விடுதலை பெறும் என்பது மட்டும் நிதர்சனம்.



அனைத்து நூல்களும் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் மாபெரும் புத்தகப் பூங்கா அமைக்கப்படும் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் புத்தகக் காட்சிகள் நடத்தப்படும் என்ற அறிவிப்புகளை வெளியிட்டமைக்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் தலைவர் எஸ்.வயிரவன் மற்றும் நிர்வாகிகள் நேற்று சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

### வேலை வாய்ப்புகளில் 33சதவீதம் பெண்களுக்கு ஒதுக்கபட்டிருக்கிறது

# விரைவிலேயே அது 50சதவீதமாக மாறும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சுரேஷ்குமார்



திருவரங்குளம் மார்-21 நாட்டில் அத்தனை வேலை வாய்ப்புகளிலும் கட்டாயம் 33சதவீதம் பெண்களுக்கு ஒதுக்கபட்டிருக்கிறது விரைவிலேயே அது 50சதவீதமாக மாறும் என சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சுரேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

கைக்குறிச்சி ஸ்ரீ பாரதி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் 13-வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு கல்வி நிறுவனங்களின் தலைவர் குரு.தனசேகரன் தலைமை தாங்கினார். தாளாளர் ஏ.லியோ பெலிக்ஸ் லூயிஸ் அறங்காவலர் உறுப்பினர்கள் சி.சரவணன், அ.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.பி.ஆர்.பாலகிருஷ்ணன், மு.பாலசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் சிறப்பு விருந்தினராக சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ரா.சுரேஷ்குமார் கலந்து கொண்டு மாணவிகளுக்குபட்டங்களை வழங்கி பேசுகையில். பட்டம் பெறுகின்ற பெரும்பாலானவர்கள் இம்மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பீர்கள். பின் தங்கிய இப்பகுதியில் காலையில் கல்லூரிக்குச் சென்று மாலையில் வீடுகளுக்குச் செல்லும் ஒரு வாய்ப்பு அமைந்திருக்கிறது என்பது பெருமைப்பட வேண்டிய விசயம். ஏனென்றால் ஒரு காலத்தில் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால் பல கிலோ மீட்டர் செல்ல வேண்டிய சூழ்நிலை இப்பகுதியில்இருந்ததைநான் கண்கூடா பார்த்துள்ளேன். தற்போது உலகை உலுக்கிக் கொண்டிருக்கிற கொடூரமான செயல் என்னவென்றால் ரஷ்யா-உக்ரைன் போர் தான் இந்த போர் தொடங்குவதற்கு முன்பு உக்ரைன் என்கிற ஒரு நாடு எங்கிருந்தது என்று பெரும்பாலும் அறியப்படவில்லை ஆனால் இப்போது அந்த நாட்டைப் பற்றியே அனைத்து சிந்தனைகளும் மேலோங்கி இருக்கிறது.

அதைவிட நம்நாட்டில் இருந்து மருத்துவ படிப்புக்காக அந்நாட்டிற்கு சென்றவர்களை பத்திரமாக தமிழக அரசு மீட்டுள்ளது என்பது நமக்கெல்லாம் கிடைத்த ஒரு புதிய உத்வேகம் என்று தான் சொல்ல வேண்டும். இன்றைக்கு எல்லாவற்றிலும் பெண்கள் என்கின்ற நிலைமைக்கு நம்முடைய சமூகம் மெல்ல, மெல்ல வந்துக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். மக்கள் தொகையில் 50சதவீதம் பெண்கள் தான் இருக்கிறார்கள் ஆகவே ஒவ்வொன்றாக சட்டப்பூர்வமாகவும் சரி, சமுதாயம் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலும் சரி பெண்களுக்கு எல்லாவற்றிலும் சமபங்கு வழங்கவேண்டும் என்கிற நிலைமை இப்போது வந்துள்ளது.அத்தனை வேலை வாய்ப்புகளிலும் கட்டாயம் 33சதவீதம் பெண்கள் ஒதுக்கபட்டிருக்கிறது அதை 40சதவீதமாக உயர்த்த அறிவிப்புகள் வர இருக்கின்றன.விரைவிலேயே அது 50சதவீதமாக மாறும் என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. 100பேர் வேலைப்பார்க்கிற இடத்தில் 50பேர் பெண்கள் என்றால் இது மிகப்பெரிய புரட்சி என்று தான் சொல்ல வேண்டும்.மேலை நாடுகளில் தான் பெண்களுக்கு சமஉரிமை வழங்கப்படுகிறது. அங்கே தான் பெண் கல்விக்கு முக்கியத்துவம் தரப்பட்டது, அங்கே தான் ஆண்-பெண் சமமாக நடத்தப்படுகிறார்கள் என்றெல்லாம் நாம் அறிந்திருக்கிறோம்.இப்போது பெருவாரியாக அதனை நம் நாடும் மாற்றியிருக்கிறது. நீதித்துறையை எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு மாவட்டத்தில் ஆண் நீதிபதியை விட பெண் நீதிபதிகள் அதிகமாக இருப்பார்கள். அதைப்போல் இத்துறைக்கு நடக்கும் அதிகமான தேர்வுகளில் கூட பெண்கள் தான் வெற்றி பெறுகிறார்கள் ஆகவே உங்களுக்கான அந்தஸ்து உருவாகிக் கொண்டே செல்லுகிறது அதனை நன்கு பயன்படுத்திக் கொள் வேண்டும் என்பதே என்னுடைய விருப்பம் என்றார். முன்னதாக பல்கலைக்கழக தரவரிசை பட்டியலில் இடம்பெற்ற பி.பவுசானா, பி.சீத்தாலெட்சுமி, எம்.நந்தினி, எஸ்.சுதர்சனா, ஆர்.அகிலா, பி.கார்த்திகா, ஏ.கற்பகவள்ளி, எம்.அனீஸ்மார்ஜினா, ஆர்.பிரபாநந்தினி, சுபஷ்ஸ்ரீ, என்.அழகுபாரதி ஆகியோர்களுக்கு ஊக்கத்தொகையும், சிறப்பு பரிசும் வழங்கப்பட்டன. இளங்கலைப்பிரிவில் 664, முதுகலைப்பிரிவில் 58, ஆய்வியல் நிறைஞர் பாடப்பிரிவில் 19பேரும் மொத்தமாக 741மாணவிகள் பட்டம் பெற்றனர். ஏப்ரல்-2020-ல் நடைபெற்ற பாரதிதாசன் பல்கலைக்கழகத் தேர்வில் உயிர் தொழில்நுட்பவியில், கணினி பயன்பாட்டியல். வேதியல், கணினியியல். தகவல் தொழில்நுட்பவியில், நுண்ணிரியல். இயற்பியல். ஆடை வடிமைப்பியல், ஆங்கில இலக்கியம், வரலாறு, தமிழ், வணிக நிர்வாகவியல், வணிகவியல், மற்றும் முதுகலைப்பிரிவில் கணினி அறிவியல், கணிதவியல், ஆங்கிலம், தமிழ். வணிகவியல், பட்டயப்பிரிவில் தமிழ், வணிகவியல், கணினி அறிவியல். கணிதவியல் ஆகிய பாடப்பிரிவுகளில் 100சதவீதம் தேர்ச்சிப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. நிகழ்ச்சியில் கல்லூரியின் முதல்வர் செ.கவிதா பட்டமளிப்பு அறிக்கையை சமர்பித்தார். இயக்குநர் மா.குமுதா நன்றி கூறினார்.



அமைச்சசர்கள் மா.சுப்பிரமணியன், த.மனோ தங்கராஜ் ஆகியோர் மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் ஆயக்கோடி ஊராட்சிக்குட்பட்ட அண்டுர் குளத்தங்கரையை சேர்ந்த பயனாளியின் வீட்டிற்கு நேரில் சென்று மருந்து பெட்டகத்தினை வழங்கினர்.



# இன்று

21-3-2022






மாதுளம் பழம் சாப்பிட்டால் குடல் புழுக்கள் அழியும்

சக வருடம் 1943 பால்குன 30

| | | | |
|---|---|---|---|
| பிலவ பங்குனி 7 | MAR - MON திங்கள் | ஷ'.பான் 17 தேய்பிறை 080 / 285 | இராசிபலன் |

தேய். திரிதியை 19.54 (கா. 10.17) சுவாதி 42.30 (மா. 11.19) சேஷம் 02.29 அகஸ் 29.58 தியாஜ் 55.43 அமிர்த 42.30 மேல் மரண. பிரம்ம கல்பாதி. சங்கடஹர சதுர்த்தி. சுபமுகூர்த்தம். மதுரை பிரசன்னவெங்கடேச பெருமாள் புஷ்ப பல்லக்கில் பவனி.

| | நல்லநேரம் | கௌரி.நெ. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 6.00-7.00 | 9.30-10.30 | 07.30 | 01.30 | 10.30 |
| மாலை | 4.30-5.30 | 7.30-8.30 | 09.00 | 03.00 | 12.00 |

சூலம் : கிழக்கு; பரிகாரம் : தயிர்; மீன லக்கனம் இருப்பு நா. 3 வி. 25; சந்திராஷ்டமம் உத்திரட்டாதி ரேவதி; கரணம் : 9-10.30; சூரிய உதயம் : 6.19

மேஷம் - லாபம்; ரிஷபம் - ஆர்வம்; மிதுனம் - முயற்சி; கடகம் - தடங்கல்; சிம்மம் - எதிர்ப்பு; கன்னி - வரவு; துலாம் - பொறுமை; விருச்சி - பரிவு; தனுசு - பாசம்; மகரம் - விருப்பம்; கும்பம் - நன்மை; மீனம் - வெற்றி

போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து

www.mahacalendar.com

## சிந்திப்போம்.... செயல்படுவோம்


மனிதனுக்கு எந்த அளவு
அறிவு இருக்கிறதோ
அதே அளவு
முட்டாள்தனமும் அவன்
மூலையில் எங்கோ
ஓரிடத்தில் இருக்கிறது




தங்கமான தெரு - நெல்லுமண்டி தெரு
ஸ்ரீ புவனேஸ்வரி ஜுவல்லர்ஸ்
தங்கம் | வெள்ளி | வைரம் | பரிசுப்பொருட்கள்
3179, நெல்லுமண்டி தெரு, புதுக்கோட்டை - 622 001. போன் : 04322 222504, 222 505

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,805 | Rs.5,204 |


## வரலாற்றில் இன்று



1925 அமெரிக்காவின் டென்னிசி மாநிலத்தில் மனிதக் கூர்ப்பு பற்றிய கல்வி தடை செய்யப்பட்டது.

1935 பாரசீக நாட்டை ஈரான் (ஆரியரின் நாடு) என அழைக்கும்படி அதன் தலைவர் ரெசா ஷா வெளிநாடுகளுக்கு அழைப்பு விடுத்தார்.

1937 புவேர்ட்டோ ரிக்கோவில் பொன்சு நகரில் அமெரிக்க ஆளுநரின் உத்தரவின் கீழ் காவல்துறையினர் சுட்டதில் 19 பேர் கொல்லப்பட்டனர்.

1945 இரண்டாம் உலகப் போர்: பர்மாவின் மண்டலை நகரை பிரித்தானியப் படையினர் விடுவித்தனர்.

1945 இரண்டாம் உலகப் போர்: பிரித்தானிய விமானங்கள் தென்மார்க்கின் கோபனாவன் நகரில் பாடசாலை ஒன்றின் மீது குண்டுகளை வீசியதில் 125 பேர் கொல்லப்பட்டனர்.

1948 முகமது அலி ஜின்னா உருது மட்டுமே பாக்கித்தானின் அரசு மொழியாக இருக்கும் என டாக்காவில் வைத்து அறிவித்தார்.

1960 தென்னாபிரிக்காவின் இனவொதுக்கல்: தென்னாபிரிக்காவில் சார்ப்வில் என்ற இடத்தில் கறுப்பின தென்னாபிரிக்க ஆர்ப்பாட்டக்காரரை நோக்கி காவற்படையினர் சுட்டதில் 69 பேர் கொல்லப்பட்டனர்.

1965 நாசா ரேஞ்சர் 9 என்ற சந்திரனுக்கான தனது ஆளில்லா விண்ணுளவியை ஏவியது.

1970 முதலாவது பூமி நாளுக்கான அழைப்பை சான் பிரான்சிஸ்கோ நகர முதல்வர் யோசப் அலியோட்டோ விடுத்தார்.

1980 ஆப்கானித்தானில் சோவியத் ஆக்கிரமிப்பை எதிர்த்து மாஸ்கோவில் 1980 ஒலிம்பிக் விளையாட்டுகளைப் பகிஷ்கரிப்பதாக ஐக்கிய அமெரிக்க அதிபர் ஜிம்மி கார்ட்டர் அறிவித்தார்.

1984 மணலாறு பிரதேசத்தைத் தடைவலயமாக்கி இலங்கை அரசு அங்கு வாழ்ந்து வந்த தமிழர்களை அடித்து விரட்டினர்.

1990 75 ஆண்டுகால தென்னாபிரிக்க ஆட்சியிலிருந்து நமீபியா விடுதலை பெற்றது.

1999 பெர்ட்ராண்ட் பிக்கார்டு பிறையன் யோன்சு ஆகியோர் வெப்ப வாயுக் கூண்டில் உலகை வலம் வந்து சாதனை படைத்தனர்.

2000 திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இசுரேலுக்கான தனது முதலாவது இறைப்பயணத்தை மேற்கொண்டார்.

## கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உடற்கூறு ஆய்வுக்கு லஞ்சம்



கரூர் மார்.21–

கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், விபத்துகளில் சிக்கி உயிரிழப்போர் உடற்கூறு ஆய்வுக்கு லஞ்சம் வாங்கும் வீடியோ சமூக வலைதளங்களில் தற்போது வைரலாகி வருகிறது.

கரூர் அரசு மருத்துவக் கல்லூரியில் ஒப்பந்த ஊழியர்கள் ஒருபுறம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ஊழியர்கள் ஒருபுறம் என பலர் பணியாற்றி வரும் நிலையில், அறுவைசிகிச்சை செய்து கொண்டவர்கள் மற்றும் பரிசோதனைக்கு வந்தவர்கள் என்று ஏராளமான நோயாளிகள் இங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர். மருத்துவமனைகளில் சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டாலும், நோயளிகளை பார்வையாளர்கள் பார்ப்பதற்கு லஞ்சம், பிரசவத்திற்கு லஞ்சம் என்று குற்றச்சாட்டு அதிக அளவில் எழுவது வழக்கம். இந்நிலையில் தற்போது பிரேத பரிசோதனை அறையிலும் லஞ்சம் விஸ்வரூபம் எடுக்க தொடங்கியுள்ளது.

கரூர் மாவட்ட அளவில், விபத்து மற்றும் தற்கொலை செய்து கொண்டவர்கள் என பிரேத பரிசோதனைக்கு வரும் பிரேதங்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், பிரேதத்தங்களை உடற்கூறாய்வு செய்ய ஏழைகள் என்றால் ரூ ஆயிரம் முதல் ரூ.2 ஆயிரம் மற்ற பிரேதங்கள் என்றால் ரூ 4 ஆயிரம் மற்றும் அதற்கு மேல் என்று சவக்கிடங்கு ஊழியர்கள் அநியாய லஞ்சம் வாங்குவதாக கூறப்படுகிறது,

இந்நிலையில், கடந்த சிலதினங்களுக்கு முன்னர் விபத்தில் உயிரிழந்த ஒருவரின் உடலை பிரேத பரிசோதனை செய்ய லஞ்சம் வாங்கும் காட்சி தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. பிரேத பரிசோதனை செய்பவர்கள், பிரேதத்தை கொண்டு வருபவர்களிடம் வாங்கும் பணம், உடற்கூறாய்வு முடிந்த பின்பு பிரேதத்தை கட்டும் துணிகளுக்கு என்று கூறப்படும் நிலையில், அடையாளம் தெரியாத பிரேதத்திற்கு கூட இந்த பணம் கட்டாயமாம்,

பிரேதத்தை கொண்டு வரும் ஆம்புலன்ஸ் டிரைவர்களிடம் கூட பணம் வாங்கி விட்டு தான் பிரேத பரிசோதனை செய்வார்கள் என கூறப்படுகிறது.




கார்த்திக் மெஸ்
உயர்தர அசைவ உணவகம்
Rtn. S.மூர்த்தி & பிரதர்ஸ்
சிவகாமி அம்மன் இரத்ததான கழகம்
புதுக்கோட்டை மாவட்ட இயற்கை விவசாயிகள் சங்கம்
புதிய பேருந்துநிலையம் எதிரில், புதுக்கோட்டை
செல் : 94426 42437


## தேர்வில் 10 ஆயிரம் மாணவர்களை ஆப்சென்ட் செய்து அண்ணா பல்கலைக்கழகம் அதிரடி

சென்னை, மார்.21–

அண்ணா பல்கலைக்கழக தேர்வில் விடைத்தாளை தாமதமாக பதிவேற்றியதாக கூறி 10 ஆயிரம் மாணவர்களுக்கு ஆப்சென்ட் போடப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

கொரோனா பரவலை தடுக்க விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளால்பிப்ரவரி 1ஆம் தேதியில் இருந்து மார்ச் 12ஆம் தேதி வரை, ஆன்லைனில் அண்ணா பல்கலைக்கழகத்தேர்வுகள் நடைபெற்றன. ஆன்லைன் தேர்வில் விடைத்தாள்களை தாமதமாக பதிவேற்றியதாக கூறி 10ஆயிரம் மாணவர்கள் மீது அண்ணா பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

10ஆயிரத்திற்குமேற்பட்ட மாணவர்களுக்கு ஆப்சென்ட் போடப்பட்டதால் அவர்கள்தேர்ச்சிபெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. குறிப்பிட்ட நேரத்திற்குள் விடைத்தாள்களை அனுப்பி வைக்காததால், அவர்களின் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்ப டவில்லை என அண்ணாபல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. மாணவர்களுக்கு ஆப்சென்ட் போடப்பட்ட நிலையில் அடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்க குழு அமைக்கப்பட்டுள்ளதாக, அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தர் வேல்ராஜ் தெரிவித்துள்ளார்.

## பஞ்சாப் மாநில அரசுத் துறைகளில் 25 ஆயிரம் பேருக்கு பணி நியமன ஆணை



பஞ்சாப் மார்.21–

பஞ்சாப் முதல்வராக பதவியேற்ற பகவந்த் மான், முதல் வேளையாக, மாநில அரசுத்துறைகளில் 25 ஆயிரம் பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்க முடிவு செய்துள்ளார்.

இதுகுறித்த பகவந்த் மான் அளித்திருக்கும் ஆணையில், காவல் துறையில் மட்டும் 10 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு தரப்படவுள்ளது. எஞ்சிய 15 ஆயிரம் பேர் அரசின் பிற துறைகளில் காலியாக இருக்கும் பணியிடங்களில் அமர்த்தப்படவுள்ளனர். பகவந்த் மான் தலைமையில் கூடிய அமைச்சரவை கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. கூட்டம் முடிந்ததும் செய்தியாளர்களை சந்தித்த முதலமைச்சர் பகவந்த் மான், 'அரசுப் பணிக்கான நியமனங்கள் அனைத்தும் கல்வி உள்ளிட்ட தகுதியின் அடிப்படையிலேயே நிரப்பப்படும்' என்றும் உறுதியளித்துள்ளார்.

## மின்சாரம் தாக்கி காயமடைந்த சிறுவனின் சிகிச்சைக்காக 5 லட்சம் ரூபாய் நிவாரண நிதி



தேனி மார்.21–


மின்சாரம் தாக்கி காயமடைந்த சிறுவனின் சிகிச்சைக்காக 5 லட்சம் ரூபாய் நிவாரண நிதியை வீட்டிற்கே நேரில் சென்று தேனி மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

தேனி மாவட்டம் உத்தமபாளையம் தாலுகா கம்பம் அருகே லோயர் கேம்ப் கிராமத்தைச் சேர்ந்தவர் செல்வகுமார். இரண்டாம் வகுப்பு படிக்கும் இவரது மகன் பகவதி, கடந்த 2021 ஆம் ஆண்டு எதிர்பாராத விதமாக மின் விபத்தில் சிக்கி பலத்த காயமடைந்தார்: இதையடுத்து உயிருக்கு போராடிய நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்நிலையில், பாதிக்கப்பட்ட சிறுவனின் பெற்றோர் கடந்த பிப்ரவரி மாதம் சென்னையில் உள்ள தலைமை செயலகத்திற்கு நேரில் சென்று தமிழக முதல்வரிடம் தங்கள் மகனின் நிலை குறித்தும் குடும்ப வறுமையை குறிப்பிட்டும் மனுக் கொடுத்தனர்.

இதனைத்தொடர்ந்து தமிழக முதல்வர் அச்சிறுவனின் மருத்துவ சிகிச்சைக்காகவும் கல்வி கற்பதற்காகவும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.5 லட்சம் வழங்கிட உத்தரவிட்டார். அதன்படி, தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் கே.வீ. முரளிதரன் லோயர் கேம்பில் உள்ள பாதிக்கப்பட்ட சிறுவனின் வீட்டிற்கு நேரில் சென்று முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்ட 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையை சிறுவனின் பெற்றோரிடம் வழங்கினார்.

இதையடுத்து பெற்றோர்கள் தமிழக முதல்வருக்கு நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்தனர். நிகழ்வில் உத்தமபாளையம் வருவாய்கோட்டாட்சியர் கௌசல்யா உள்ளிட்ட அதிகாரிகள் உடனிருந்தனர்.

## உக்ரைனில் சகோதரனின் உயிரை காப்பாற்ற தன் மீது குண்டுகளை வாங்கிக் கொண்ட சகோதரி



உக்ரைன் மார்.21–

உக்ரைனில் ரஷ்ய படையினரின் தாக்குதலில் உயிருக்கு ஆபத்தான நிலையில்மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட குடும்பத்தை அதிபர் செலன்ஸ்கி நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

உக்ரைனுக்கு சொந்தமான கிரைமியா தீபகற்பத்தை ரஷ்யா தன்னோடு இணைத்துக் கொண்டதை பிடிக்காமல் அங்குவசித்தவிளாசென்கோ என்பவரது குடும்பம் கீவ் பகுதிக்குபுலம்பெயர்ந்தது. இந்நிலையில்உக்ரைன்மீது படையெடுப்பு நடத்திய ரஷ்ய படைகள் கீவ் நகரில் சரமாரியாக தாக்குதல் நடத்தியது. அப்போது விளாசென்கோ குடும்பத்தினர் சென்ற காரும் ரஷ்ய வீரர்களின் துப்பாக்கி குண்டுகளால் துளைக்கப்பட்டது.காருக்குள் இருந்த விளாசென்கோவின் 16 வயது மகள், தனது 8 வயது தம்பியின் உயிரை காப்பாற்ற கட்டியணைத்து, துப்பாக்கி குண்டுகளை தனது முதுகில் வாங்கிக் கொண்டார்.

சிறிது நேரத்தில் ரத்த வெள்ளத்தில் மயங்கிய அக்காவை கண்டு அதிர்ச்சி அடைந்த தம்பி காரில் இருந்து வெளியே வந்து அக்கம் பக்கத்தில் இருந்தவர்களிடம் உரக்கமாக உதவி கேட்டுள்ளான். இந்த தாக்குதலில் குழந்தைகளின் தாய் டெட்டியானாவும் படுகாயமடைந்தநிலையில், இருவரும் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். தொடர் சிகிச்சைக்குப் பின் இருவரது உயிரையும் மருத்துவர்கள் காப்பாற்றினர். இந்த தகவலை அறிந்த அதிபர் செலன்ஸ்கி நேரடியாக மருத்துவமனைக்கு சென்று பூங்கொத்து கொடுத்துவிளாசென்கோ குடும்பத்தினருக்குஆறுதல் தெரிவித்துள்ளார்.

## கடந்த 2–ஆண்டுகளில் இல்லாத வீழ்ச்சி நிலையில் நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு

டெல்லி மார்.21–

நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு மதிப்பு 2 ஆண்டுகளில் இல்லாதஅளவிற்குவீழ்ச்சி கண்டுள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

மார்ச் 11ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் அந்நிய செலாவணி கையிருப்பு மதிப்பு 9.64 பில்லியன் டாலர் அளவிற்கு சரிந்து 622.27 பில்லியன் டாலராக இருந்ததாக ரிசர்வ் வங்கி கூறியுள்ளது. உக்ரைன் - ரஷ்யாபோர் காரணமாக இந்திய ரூபாய் மதிப்பு மார்ச்7ஆம்தேதி இதுவரை இல்லாத அளவாக 77.02 ரூபாயாக வீழ்ச்சி கண்டது. இந்நிலையில், ரூபாய் மதிப்பு வீழ்ச்சியடைவதைக் கட்டுப்படுத்த அதிக அளவு அமெரிக்க டாலர்களை விற்றதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

## அறந்தாங்கி அருகே குன்னூரில் காமண்டி திருவிழாவை முன்னிட்டு கைப்புறா எல்கை பந்தயம்



அறந்தாங்கி மார்.21–

அறந்தாங்கி அருகே குன்னூரில் காமண்டி திருவிழாவை முன்னிட்டு கைப்புறா எல்கை பந்தயம் நடைபெற்றது.


புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகே குன்னூரில் காமண்டி திருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற கைப்புறா எல்கை பந்தையத்தில் குண்ட கவயல், தொன்டைமானேந்தல், வீரராகவபுரம், பள்ளத்திவயல், மேல்மங்கலம், கிடங்கிவயல் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட மாடுகள் போட்டியில் பங்கேற்றன.

குன்னூர், வெண்ணாமொழியேந்தல் கிராம கோயில் எல்லையிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரம் பந்தயம் எல்லை வகுக்கப் பட்டிருந்தது. இதில் பெரியமாடு, நடுமாடு, கரிச்சான் மாடு பூஞ்சிட்டு என 4 பிரிவுகளாக போட்டி நடைபெற்றது. பந்தயத்தில் சீறிப்பாய்ந்த மாட்டைகையில்பிடித்துக் கொண்டு வீரர்கள் பந்தய இலக்கினை நோக்கி ஓட்டம் பிடித்தனர். வெற்றி பெற்ற மாட்டின் உரிமையாளர்களுக்கு 30 ஆயிரம் மதிப்பிலான ரொக்கப்பணம் மற்றும் நினைவுக் கோப்பை பரிசாக வழங்கப்பட்டது.

மேலும் மாடுகளை சிறப்பாக ஓட்டி வந்த சாரதிகளுக்கு கொடிப் பரிசும் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியை ஏராளமான பொதுமக்கள்,ரசிகர்கள் சாலையின் இருபுறமும் நின்று கண்டு ரசித்தனர். நிகழ்ச்சியை குன்னூர், வெண்ணாமொழியேந்தல் கிராம மக்கள் ஏற்பாடு செய்திருந்தனர்

### தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில்

## போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா




தேவகோட்டை மார்.21–

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது.

விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் ஆசிரியை முத்துலெட்சுமி வரவேற்றார். தலைமை ஆசிரியர்லெ.சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். தேவகோட்டை, குன்றக்குடி தைப்பூச காவடி நகரத்தார், ஸ்ரீ சண்முகநாதன் அன்னதான அறக்கட்டளை செயலர் சண்முகம், அறக்கட்டளை நிர்வாகிகள் சிதம்பரம், நாச்சியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். அறக்கட்டளை நிர்வாகி அய்யப்பன் பேசுகையில், கல்வியோடு சிறந்த ஒழுக்கத்தையும் கற்றுக் கொள்ள வேண்டும். கண்முன் கஷ்டப்படுபவர்களுக்கு உதவவேண்டும்.தானத்தில் சிறந்தது அன்னதானம். அதையும் தாண்டி சிறந்தது நிதானம்.எதிலும் பொறுமையாக சிந்தித்து செயல்பட வேண்டும். தேர்வுஎழுதபட,படஎன்று செல்லகூடாது.நிதானமாக சென்று எழுதினால் தான் படித்தது மனதில் நிற்கும். நிதானமாக இருக்கிறேன் என்றுசோம்பேறித்தனமாக செயல்படக் கூடாது, என்று பேசினார். போட்டிகளில் சிறப்பாக பங்கேற்ற மாணவர்கள் ஹரிஹரசுதன் , நதியா, முத்தய்யன் ஆகியோருக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. நிறைவாக ஆசிரியர் ஸ்ரீதர் நன்றி கூறினார்.

## அரியலூர் அருகே கல்லங்குறிச்சி கலியுக வரதராஜ பெருமாள் கோவில் பெருந்திருவிழா ஸ்ரீ ராமநவமியன்று கொடியேற்றத்துடன் துவக்கம்



அரியலூர் மார்.21–

அரியலூர் அருகே, கல்லங்குறிச்சி கலியுக வரதராஜ பெருமாள் கோவில் பெருந்திருவிழா, ஏப்ரல் 10ஆம் தேதி, ஸ்ரீ ராமநவமி அன்று கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

அரியலூர் அருகில், கல்லங்குறிச்சி கிராமத்தில் கலியுக வரதராஜ பெருமாள் திருக்கோயில் உள்ளது. அரியலூர், தஞ்சாவூர், பெரம்பலூர், திருச்சி, கடலூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், சேலம், உள்ளிட்ட மாவட்டங்களில் வசிக்கும், பல லட்சம் மக்களின் பிரார்த்தனை தலமாக விளங்கும், கல்லங்குறிச்சி கலியுக வரதராஜ பெருமாள் கோயில், அதன் பக்தர்களால் கலிய பெருமாள் கோயில் என்றழைக்கப்படுகிறது. இக்கோவிலின் ஆண்டு பெருந்திருவிழா, வருகின்ற ஏப்ரல் 10–ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீராமநவமியன்று, கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

கம்ப பெருமாளை மூலவராக கொண்ட இத்திருக்கோவில், பெருந்திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சிகளான, வெள்ளி கருட சேவை மற்றும் படத்தேர், ஏப்ரல் 14 ஆம் தேதியன்றும், 16ஆம் தேதி திருக்கல்யாண உற்சவமும், நடைபெறுகிறது. திருவிழாவின் மிகமுக்கிய நிகழ்வான, தேரோட்டம் மற்றும் திருத்தேர் வடம் பிடித்தல் 18ஆம் தேதி காலையிலும், ஏகாந்த சேவை 19ஆம் தேதி இரவும் நடைபெறுகிறது.

தேரோட்டம் மற்றும் ஏகாந்த சேவையை முன்னிட்டு, அரியலூர், பெரம்பலூர், ஆத்தூர், சேலம், தஞ்சாவூர், திருச்சி, மயிலாடுதுறை, கும்பகோணம், ஜெயங்கொண்டம் மற்றும் திட்டக்குடி உள்ளிட்ட ஊர்களில் இருந்து,கல்லங்குறிச்சிக்கு 100–க்கும் மேற்பட்ட சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

பெருந்திருவிழாவுக்கான ஏற்பாடுகளை,கோவிலில் ஆதீன பரம்பரை தர்மகர்த்தாக்கள் ராமச்சந்திர படையாட்சி, ராமதாஸ் படையாட்சி, வெங்கடாஜலபதி படையாச்சி, மற்றும் அவர்களது வம்சாவழியினர் செய்து வருகின்றனர்.

21.03.2022 ❖ வரலாறு

# கல்வி மேலாண்மை குழு சார்பாக பெற்றோர்களுக்கான கலந்தாய்வுக் கூட்டம்



செங்கல்பட்டு , மார்- 21;
செங்கல்பட்டு மாவட்டம் இலத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட கொடு ஊராட்சியில் அமைந்துள்ள ஊராட்சி தொடக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளியில் பள்ளி மேலாண்மை குழு சார்பாக பெற்றோர்களுக்கான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கொடு ஊராட்சி மன்றதலைவர் மா.புண்ணியகோட்டி தலைமை தாங்கினார்.

கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக கொடு ஊராட்சி மன்ற துணை தலைவர், ஒன்றியக்குழு உறுப்பினர். செல்வகுமார் மற்றும் வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில்பள்ளியை மேம்படுத்தவும் பள்ளி மேலாண்மை குழுவை வளுப்படுத்தவும் மாணவர்களின் நலன் குறித்தும் அவர்களுடைய கல்வி வளர்ச்சி குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. இறுதியில் பள்ளி தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்கள் நன்றி தெரிவித்தனர்.

# இரணியசத்தி கிராமத்தில் தமிழக வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பாக விவசாயிகள் நலன் காக்கும் ஐம்பெரும் விழா



செங்கல்பட்டு , மார்- 21;
செங்கல்பட்டு மாவட்டம் பவுஞ்சூர் அருகே உள்ள இரணியசத்தி கிராமத்தில் பவுஞ்சூர் வட்டார வேளாண்மை மற்றும் உழவர்நலத் துறை சார்பாக விவசாயிகள் நலன் காக்கும் விதமாக விவசாயிகளுக்கு மண்வள மேம்பாடு பயிற்சி, உயிர் உரம்வழங்குதல்,வேளாண் கருவிகளின் தொகுப்பு வழங்குதல்,தார்ப்பாய் வழங்குதல், விதை மினிகிட் வழங்குதல் என ஐம்பெரும் விழாவாக நடைபெற்றது.

இதில் இரணியசத்தி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் சுமார் நூாற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இதில் பவுஞ்சூர் வட்டார வேளாண்மை அலுவலகத்தில் ஏற்கனவே பதிவு செய்திருந்த விவசாயிகளுக்கு வேளாண் கருவிதொகுப்பு, தார்ப்பாய், மண் பரிசோதனை அட்டை மற்றும் மின்னணு மருந்து தெளிப்பான் ஆகியவை வேளாண்மை துறை சார்பாக மலிவு விலையில் வழங்கப்பட்டது.




பார்கவுன்சில் வளாகத்தில் அனைத்து வழக்கறிஞர்கள் சங்கங்களுக்கு சட்ட புத்தகம் வழங்கும் விழாவில் தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மற்றும் தமிழக நிதி,மனிதவள மற்றும் மேலாண்மை துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் கலந்துகொண்டு சட்ட புத்தகங்களை அனைத்து வழக்கறிஞர் சங்கங்களுக்கும் வழங்கி சிறப்புரையாற்றினர். மெலும். பார் கவுன்சில் தலைவர் பி.எஸ்.அமல்ராஜ். வரவேற்புரை நிகழ்த்தினார். அகில இந்திய பார் கவுன்சிலின் துணை தலைவர். மூத்த வழக்கறிஞர். எஸ்.பிரபாகரன், மூத்த வழக்கறிஞர் ஆர்.விடுதலை, ஜி.மோகன கிருஷ்ணன், பிரிசில்லா பாண்டியன், பி.அசோக், பார் கவுன்சில் உறுப்பினர்கள் ஏ.கொதண்டம், எம்.ஆர்.ஆர். சிவசுப்ரமணியன் சிறப்புரையாற்றினர். பார் கவுன்சில் டி.சரவணன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். மெலும்.இவ்விழாவில் பார்கவுன்சில், சிஸ்ரீ முருகா, ஆர்.அய்யாவு, கே.சந்திரமொகன், எம்.வரதன் கே.ஆர். ஆர்.அய்யப்பமணி. கலந்து கொண்டனர். மெலும். பார் கவுன்சிலின் துணை தலைவர் வி.கார்த்திகேயன் நன்றியுரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் தமிழகத்தின் அனைத்து வழக்கறிஞர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

# மஞ்சள் ஆற்றின் குறுக்கே புதிய கடைமடை நீரொழுங்கி அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா



தரங்கம்பாடி, மார்- 21;
மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா திருக்கடையூர் அடுத்து காலமநல்லூர் ஊராட்சி மஞ்சள் ஆற்றின் குறுக்கே ரூ. 789 லட்சம் மதிப்பீட்டில் புதிய கடைமடை நீர் தேக்கி அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. இதில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும் நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளருமான நிவேதா எம்.முருகன் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினார்.

தரங்கம்பாடி தாலுகா காலமநல்லூர் ஊராட்சியை சார்ந்த கிடங்குகள், மருதமபள்ளம், மாமாகுடி, பிள்ளைபெருமாநல்லூர், திருக்கடையூர், ஆகிய கிராமங்களில் உள்ள பாசன நிலம் யாவும் மஞ்சள் ஆற்றின் கடைமடை பகுதிகளாக உள்ளது. மஞ்சளாறு வங்காளவிரிகுடாகடலில் கலக்குமிடம் வரை 5.500 கி.மீட்டர் நீளத்திற்கு மஞ்சளாற்றின் குறுக்கே எவ்விதகட்டுமானங்களும் அமைக்கப்படவில்லை.

இதனால் கடலில் அதிகப்படியான கடல் அலைவரும்போது கடல் நீரானது மஞ்சளாறு முகத்துவாரம் வழியாக உட்புகுந்து கடைமடை 5.500 கி.மீட்டர் நீளத்திற்கும் கடல் நீர் தேங்கிவிடுகிறது .

எனவே மஞ்சளாறு கரை ஓரம் உள்ள விளைநிலங்கள் யாவும் உவர் நிலங்களாக மாறி வருகிறது. எனவே அதனை தடுக்கும் விதமாக மஞ்சள் ஆற்றின் குறுக்கே நீரொழுங்கி அமைத்து தருமாறு விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்து வந்துள்ளனர். இதனை ஏற்ற தமிழக அரசு ரூ.789 இலட்சம் மதிப்பில்புதியநீரொழுங்கி கட்டுவதற்கான அரசாணைவெளியிட்டது.

அதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

சிறப்பு அழைப்பாளராக பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளருமான நிவேதா எம்.முருகன் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினார். இதில், செம்பை ஒன்றிய பெருந்தலைவர் நந்தினி ஸ்ரீதர், துணைத்தலைவர் மைனர் பாஸ்கர், பொதுப்பணித் துறை உதவி செயற்பொறியாளர் பாண்டியன்,பொறியாளர் விஜய் பாஸ்கரன், உதவி பொறியாளர் விவேகானந்தன், ஒன்றிய திமுக செயலாளர்கள் அப்துல் மாலிக், பி.எம். அன்பழகன், நாகை வடக்கு மாவட்ட திமுக துணை செயலாளர் மு.ஞானவேலன்,மாவட்ட பொருளாளர் ஜி.என். ரவி, துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.









தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க,திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில், முன்னாள் படை வீரர் நலத்துறை சார்பாக நடைபெற்ற முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்களுக்கான சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆல்பி ஜான் வர்கீஸ் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். உடன் முன்னாள் படைவீரர் நலன் உதவி இயக்குனர் அமீருள்ளிஸா,ஓய்வு பெற்ற முன்னாள் ஏர் கமண்டோ (விமானப்படை) நாராயணன்,ஓய்வுபெற்ற முன்னாள் விங் கமண்டோ (விமானப்படை) பார்த்தசாரதி ஓய்வு பெற்ற முன்னாள் சர்ஜன்ட் (விமானப்படை) அசோக்குமார், முன்னாள் படைவீரர்கள் மற்றும் முன்னாள் படை வீரர்களின் குடும்பத்தினர் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம் புழல் ஒன்றியம் விளாங்காடு பாக்கம் ஊராட்சியில் ஸ்ரீ முத்துக்குமாரசாமி கல்லூரி மூலம் என் எஸ் எஸ் ஸ்பெஷல் கேம் ப்ரோக்ராம் மூலம் கல்லூரி மாணவர்கள் மாணவிகள் கலந்துகொண்டு கிராமத்திலுள்ள பள்ளிக்கூடம் சுத்தம் செய்தல் கோவில் வண்ணம் தீட்டுதல் என தொடர்ந்து ஏழு நாட்கள் ஆக விழிப்புணர்வு கண் சிகிச்சை முகாம் மற்றும் குளம் சுத்தம் செய்தல் கல்வி விழிப்புணர்வு மற்றும் கேன்சர் நோய் பற்றிய விழிப்புணர்வு செயல்படுத்துவதற்காக கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக அருள் மொழிசெல்வன் , மாதாவரம் உதவி ஆணையாளர் அருள் சந்தோஷ், முத்துக்குமாரசாமி கல்லூரி தலைவர் விவேகானந்தன், விளாங்காடுபாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் ச.பாரதி சரவணன் ஊராட்சி திமுக செயலாளர் வழக்கறிஞர் சரவணன் துணைத்தலைவர் கலாவதி நந்தகுமார் மற்றும் வார்டு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்



கடம்பத்தூர் அரசு மேல் நிலைப்பள்ளி மேலாண்மை விழிப்புணர்வு முகாம் நடைப்பெற்றது , இதில் திருவள்ளூர் மாவட்ட கல்வி அலுவலர் எல்லப்பன் கலந்துக் கொண்டு பள்ளி மேலாண்மை பற்றி விளக்கினார், தலைமையாசிரியை ரேவதி தலைமை தாங்கினார், உதவி தலைமையாசிரியை வினோலினா முன்னிலை வகித்தார், பெற்றோர் ஆசிரியர் கழக பொருளாளர் பொன்னுதுரை வரவேற்றார், இந்நிகழ்சியில் ஊராட்சி மன்றத் தலைவர் தமிழ்செல்வி, சமூக ஆர்வலர் மூர்த்தி மற்றும் பெற்றோர்கள் வார்டு உறுப்பினர்கள் கலந்துக் கொண்டனர், தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு தலைவர் சா.அருணன் நன்றி கூறினார்



தமிழக முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் உத்தரவின்படி திருவள்ளூர் மாவட்டம் புழல் ஒன்றியம் விளாங்காடுபாக்கம் ஊராட்சியில் நம் பள்ளி நம் பெருமை பள்ளி மேலாண்மை குழு கூட்டம் விளாங்காடு பாக்கம் நலத்துறை நடுநிலைப்பள்ளி தர்காஸ் ஆரம்ப பள்ளி கண்ணம்பாளையம் ஆரம்பப் பள்ளியில் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக விளாங்காடுபாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் பாரதி சரவணன் துணைத் தலைவர் கலாவதி நந்தகுமார் வார்டு உறுப்பினர்கள் கலந்துகொண்டு சிறப்பித்து நன்றி உரை கூறினர் . இதில் விளாங்காடு பாக்கம் ஊராட்சி உள்ள நலத்துறை நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பிரபாகரன் ,தர்காஸ் பள்ளி தலைமையாசிரியர் தமிழ்ச்செல்வி கண்ணம்பாளையம் ஆரம்பப் பள்ளி தலைமையாசிரியர் ராஜகுமாரி மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு கூட்டத்தை சிறப்பித்தனர்








செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூரில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மூலம் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்து, பார்வையிட்டு கல்வித் தொலைக்காட்சியில் அரசுப் பணிக்கான போட்டித் தேர்வுகளுக்கு பயிற்சி வகுப்புகளுக்கான ஒளிபரப்பினையும் தொடங்கி வைத்தார்.

## மண்ணை மலடாக்கும் திட்டங்களை

# ஒருபோதும் தமிழகத்தில் செயல்படுத்த இந்த அரசு அனுமதிக்காது அமைச்சர் மெய்யநாதன்

ஆலங்குடி , மார்- 21;
மண்ணை மலடாக்கும் திட்டங்களை ஒருபோதும் தமிழகத்தில் செயல்படுத்த இந்த அரசு அனுமதிக்காது என அமைச்சர் மெய்யநாதன் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள நெடுவாசல் அரசு மேல்நிலைப்பள்ளியில் கலைஞரின் வரும் முன் காப்போம்திட்ட முகாமை தமிழகசுற்றுச்சூழல்துறை அமைச்சர் மெய்யநாதன் தொடங்கி வைத்தார். இந்த விழாவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதா ராமு தலைமை வகித்தார். நெடுவாசல் ஊராட்சி மன்ற தலைவர் தட்சிணாமூர்த்தி முன்னிலை வகித்தார். திருவரங்குளம் மேற்கு ஒன்றிய செயலாளர் தங்கமணி, புள்ளான்விடுதி ஊராட்சிதலைவர்பன்னீர் செல்வம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அதன் பிறகு பொதுமக்களிடம் பேசிய அமைச்சர் மெய்யநாதன் கூறியதாவது, நெடுவாசல் போராட்டத்தின்போது மக்களோடு மக்களாக களத்தில் நின்று ஹைட்ரோ கார்பன் திட்டத்திற்கு எதிராக போராடிய எனக்கு அதே சுற்றுசூழல்துறைக்கு அமைச்சராக்கி இந்த மண்ணையும்மக்களையும் பாதுகாக்கும் வாய்ப்பை வழங்கியவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.டெல்டா மண்டலத்தில் மண்ணை மலடாக்கும் மீத்தேன், ஹைட்ரோகார்பன் உள்ளிட்ட திட்டத்திற்கு அனுமதி மறுத்த முதலமைச்சர் தமிழக முதல்வர். நான் சுற்றுச்சூழல் துறை அமைச்சரான பின் அரியலூரில் 10 இடங்களிலும், கடலூரில் 5 இடங்களிலும் எண்ணெய் கிணறுகள் அமைக்க அனுமதி கேட்டபோது உடனடியாக மறுத்த அரசு இந்த அரசு.

கூடங்குளம் ஆகட்டும் ஸ்டெர்லைட் ஆகட்டும் நியூட்ரினோ திட்டம் ஆகட்டும் மக்களை பாதிக்கும் எந்த ஒரு திட்டத்தையும் தமிழக முதலமைச்சர் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்.

மண் வளத்தையும் மக்களையும் பாதிக்கும் திட்டங்களை இந்த அரசு ஒருபோதும் இங்கு செயல்படுத்த விடாது, தமிழக வரலாற்றிலேயே வேளாண்மைத் துறைக்கான தனி பட்ஜெட் அறிவித்த ஒரே அரசு இந்த அரசு. சனிக்கிழமை நடந்தவேளாண்துறையின் பட்ஜெட்டில் கூட 36 ஆயிரம் கோடி வேளாண் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு சாதனை படைத்த அரசுஇந்த அரசு.இன்றைய தினம் இளைஞர்களின் நலனுக்காக அவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் வகையில் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு திட்டத்தையும் தமிழக முதல்வர் தொடங்கி வைத்துள்ளார். இவ்வாறு புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசலில் சுற்றுச்சூழல்துறை அமைச்சர் மெய்யநாதன் பெருமையுடன் தெரிவித்தார்.

## சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்துக்கு ஆதரவு அளித்துவரும் பயணிகளை

# ஊக்குவிக்கும் விதமாக சில திட்டங்களை அமலுக்கு கொண்டு வரப்படுகிறது

சென்னை , மார்- 21;
பயணிகளை ஊக்குவிக்க ரூ.2 ஆயிரம் பரிசுகூப்பன்வழங்கப்படும் எனவும், மெட்ரோ ரெயில் நிலையங்களில் மின்சார ரெயில் டிக்கெட் பெற வசதி செய்யப்பட்டு வருவதாகவும் மெட்ரோ ரெயில் நிறுவனம் அறிவித்துள்ளது.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

சென்னை மெட்ரோ ரெயிலில் இதுவரை சுமார் 10.50 கோடி பயணிகள் பயணம் செய்துள்ளனர். இதுவரை மெட்ரோ ரெயில் சேவைகளை பயன்படுத்தி, சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்துக்கு ஆதரவு அளித்துவரும் பயணிகளை ஊக்குவிக்கும் விதமாக, சில திட்டங்கள் இன்று (திங்கட்கிழமை) முதல் அமலுக்கு கொண்டு வரப்படுகிறது. திட்டங்களின் விவரம் வருமாறு.

ஒரு மாதத்தில் அதிகபட்சமாக பயணம் செய்யும் முதல் 10 பயணிகளுக்கு தலா ரூ.2 ஆயிரம் மதிப்புள்ள பரிசு கூப்பன் அல்லது பொருள் வழங்கப்படும். இதுதவிர மேலும் 30 நாட்களுக்கு விருப்பம் போல் பயணம் செய்வதற்கான பயண அட்டை வழங்கப்படும்.

மாதம் ஒரு பரிவர்த்தனைக்கு ரூ.1,500 மற்றும் அதற்குமேல் பணம் செலுத்திய 10 பயணிகளை தேர்ந்தெடுத்து, மாதாந்திர அதிர்ஷ்ட குலுக்கல் நடத்தி, 10 பயணிகளுக்கு ரூ.2 ஆயிரம் மதிப்புள்ள பரிசு பொருட்கள் வழங்கப்படும். அதேபோல், பயண அட்டை வாங்கிய 10 பயணிகளை தேர்ந்தெடுத்து, மாதாந்திர அதிர்ஷ்ட குலுக்கல் நடத்தி, அதில் குறைந்தபட்சமாக ரூ.500-க்கு 'டாப்-அப்' செய்திருந்தால் ரூ.1,450 மதிப்புள்ள இலவச 'டாப்-அப்' மற்றும் ரூ.2 ஆயிரம் மதிப்புள்ள பரிசு பொருட்கள் வழங்கப்படும்.

மேலும் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் சார்பில், 16 மெட்ரோ ரெயில் நிலையங்களில் 'ரேபிடோ பைக்', 'உபர் ஆட்டோ' மற்றும் கார், ஸ்மார்ட் பைக் வசதிகளும், 12 மெட்ரோ ரெயில் நிலையங்களில் இணைப்பு பஸ்கள், 5 மெட்ரோ ரெயில் நிலையங்களில் பேட்டரி கார் வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் உள்ளூர் மற்றும் புறநகர் பகுதிகளுக்கு செல்லும் மின்சார ரெயிலின் டிக்கெட்டை, எழும்பூர், சென்ட்ரல் மற்றும் கிண்டி ஆகிய மெட்ரோ ரெயில் நிலையங்களிலேயே பெறும் வசதி உருவாக்கப்பட்டு வருகிறது. இந்த வசதிகள் விரைவில் நடைமுறைக்கு கொண்டு வரப்படும்.

இதுதவிர சென்னை மெட்ரோ ரெயில் நிலையங்களில் இருந்து தொழில்நுட்ப பூங்காக்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு சென்று வரும் பயணிகளுக்கு, அந்தந்த நிறுவனங்களே மெட்ரோ ரெயில் நிலையங்களுக்கு இணைப்பு பஸ் வசதிக்கான ஏற்பாடு செய்து வருகிறது. இதுபோன்ற வசதிகளை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் செய்து வருவதால் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

# திருவள்ளுவர் நற்பணி மன்றத்தின் 24ம் ஆண்டு விழா புதுக்கோட்டையில் நடைபெறுகிறது



புதுக்கோட்டை , மார்-21;
புதுக்கோட்டையில் திருவள்ளுவர் நற்பணி மன்றத்தின் இருபத்தி நான்காம் ஆண்டு விழா சனிக்கிழமை 26ம் தேதி புதுக்கோட்டை நகர் மன்ற வளாகத்தில் நடைபெற இருக்கின்றது.

விருது வழங்கும் விழா, கருத்தரங்கம், பரிசளிப்பு விழா உள்ளிட்டவை மாலை 6 மணிக்கு நடைபெற இருக்கின்றது. விழாவிற்கு கவிஞர் கண்ணதாசன் தலைமை வகிக்கிறார். மன்றத்தின் பொதுசெயலாளர் தண்டாயுதபாணி வரவேற்புரையாற்றுகிறார்.

இந்த விழாவில் திராவிட இயக்க தமிழர் பேரவை மாநிலத் தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகிறார் விழாவில் தமிழக அமைச்சர்கள் ரகுபதி, மெய்யநாதன், புதுக்கோட்டை எம்எல்ஏ முத்துராஜா, வர்த்தகர்கள், வணிகர்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

விழாவின் முக்கிய நிகழ்வாகதமிழறிஞர்களின் படத்திறப்பு விழா விளையாட்டுப்போட்டிகள் விருது வழங்குதல் கலைநிகழ்ச்சிகள் கருத்தரங்கம் மற்றும் பரிசளிப்பு விழா உள்ளிட்டவை நடைபெற உள்ளது. மன்றத்தலைவர் சாந்தகுமார் நன்றியுரை ஆற்றுகிறார்.



மதுரை மாவட்டம், பொன்னகரம் வெள்ளிவீதியார் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் மூலம் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் முதியோர் மாதாந்திர உதவித்தொகை ஆணையை நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் பயனாளிகளுக்கு நேற்று வழங்கினார். மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், மாவட்ட ஆட்சித் தலைவர் அனீஸ் சேகர், மாநகராட்சி ஆணையாளர் கார்த்திகேயன், மாநகராட்சி துணை மேயர் நாகராஜன் ஆகியோர் உடன் உள்ளனர்






புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், நெடுவாசல் கிழக்கு அரசினர் மேல்நிலைப்பள்ளியில், கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட சிறப்பு மருத்துவ முகாமை, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதன் நேற்று துவக்கி வைத்து, கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதா ராமு. துணை இயக்குநர் (பொது சுகாதாரம்) கலைவாணி, திருவரங்குளம் ஒன்றிய குழு தலைவர் வள்ளியம்மை தங்கமணி, ஊராட்சி மன்ற தலைவர் தட்சிணாமூர்த்தி மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

# அசோக் நகர் அரசு பள்ளியில் பள்ளி மேலாண்மை குழு கூட்டம்



புதுக்கோட்டை , மார்.21–
புதுக்கோட்டை அசோக்நகர் நடுநிலைப்பள்ளியில் பள்ளி மேலாண்மை குழு மறுகட்டமைப்பிற்கான விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் பள்ளி தலைமையாசிரியர் பொறுப்பு ஜீனத்துனிசா பேகம் வரவேற்புரையாற்றினார். பள்ளி மேலாண்மைக் குழு தலைவர் தங்கம் தலைமையேற்றார்.

பெற்றோர் ஆசிரியர்கழக தலைவர்தேவா முன்னிலை வகுத்தார். வட்டார கல்வி அலுவலர் செங்குட்டுவன் கலந்துகொண்டு பள்ளி மேலாண்மை குழு மற்றும் பள்ளியை மேம்படுத்துதல் சார்பாக சிறப்புரையாற்றினார். 42 வார்டுநகராட்சிஉறுப்பினர் கவிவேந்தன் மற்றும் 41 வது வார்டு நகராட்சி உறுப்பினர் பாண்டியன் கலந்து கொண்டு பெற்றோர்களிடம் பள்ளி கட்டமைப்பு மற்றும் மாணவர்களின் கற்றல் திறன்கள் பற்றி தலைமையுரை ஆற்றினார்கள்.

ஆசிரியர் பயிற்றுனர் ராதிகா மாணவர்களின் நலன் மற்றும் பள்ளி மேம்பாட்டு திட்டம் குறித்து விளக்கம் அளித்தார். ஆசிரியர் பழனிச்சாமி மற்றும் சமீம் பானு வாழ்த்துரை வழங்கினார்கள். ஆசிரியர் கஸ்தூரி நன்றி கூறினார். ஆசிரியர்கள் அனுபமா, அனுசியா ஆகியோர் விழா ஏற்பாடுகளை செய்திருந்தனர் 150க்கும் மேற்பட்ட பெற்றோர்கள் கலந்து கொண்டனர். குழந்தைகளின் கற்றல் மற்றும் பாதுகாப்பு குறித்து பெற்றோர்கள் கலந்துரையாடல் நடைபெற்றது.

# வைத்தூர் அரசுப் பள்ளியில் மேலாண்மை குழு கூட்டம்



புதுக்கோட்டை , மார்.21–
புதுக்கோட்டை மாவட்டம்பள்ளிவைத்தூர் உயர்நிலைப்பள்ளியில் பள்ளி மேலாண்மை வளர்ச்சிக் குழு விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு பள்ளி மேலாண்மை குழு தலைவர் ஆர்.ஜெயந்தி மற்றும்தலைமையாசிரியர் எம். கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பள்ளி மேலாண்மை குழு செயல்பாடுகள் குறித்தும் மறுகட்டமைப்பு குறித்தும் விரிவாக தலைமையாசிரியர் பேசினார். பள்ளியின் வளர்ச்சி குறித்து ஆசிரிய பெருமக்களும் பள்ளி மேலாண்மைக்குழு சேர்ந்தவர்களும் பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகளும் விவாதித்தனர். கூட்டத்தில் ஊராட்சி மன்ற தலைவர் தீபா நாகராஜன் ஒன்றிய கவுன்சிலர் எம். சுந்தர்ராஜ், வைத்தூர் ஆறுமுகம் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் உமா ஆறுமுகம் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் மகளிர் சுய உதவி குழு கூட்டமைப்பு பார்வதி சிறப்பு பார்வையாளராக கீரனூர் வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர் அப்சரா பானு, சமூக ஆர்வலர் க. சிவகுமார் பெற்றோர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் துவக்கத்தில் பள்ளியின் தமிழாசிரியர் கே. செல்வராஜ் வரவேற்புரையாற்றினார் நிறைவாக பள்ளியின் உதவி தலைமை ஆசிரியர் கண்மணி நன்றி கூறினார். நாட்டுப் பண்ணுடன் கூட்டம் நிறைவுபெற்றது .

# புதுக்கோட்டை சிட்கோ தொழிற்பேட்டையில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த தமிழக அரசுக்கு கோரிக்கை



புதுக்கோட்டை , மார்.21–
புதுக்கோட்டை மச்சுவாடி,முள்ளூர் சிட்கோ தொழிற்பேட்டையில் அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி தரவேண்டும் என சிட்கோ நிர்வாகிகள் தமிழக அரசிற்கு கோரிக்கை விடுத்துள்ளனர். புதுக்கோட்டை சிட்கோ தொழிற்பேட்டையில் தொழில் நடத்தி வரும் முகம்மது ஃபைஸீன் மற்றும் தொழிலதிபர்கள் தமிழக முதல்வருக்கு விடுத்துள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது:

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை, முள்ளூர் கிராமத்தில் சிட்கோ தொழிற்பேட்டை ஒன்று 1965 ஆம் ஆண்டு காமராஜரின் ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. சுமார் 22 ஏக்கர் பரப்பளவிலான தொழிற்பேட்டையில் பல தொழில் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

பல ஆண்டுகளாக அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்று எண்ணற்ற கோரிக்கை மனுக்களையும் நாங்கள் அனுப்பி இருந்த நிலையில் கடந்த 3.2.2020 அன்றைய கோரிக்கை மனுவின் படி மாவட்ட கலெக்டர் ஆணைக்கிணங்க அடிப்படை வசதிகளையும் செய்ய நடவடிக்கை முன்னெடுக்க ப்பட்டுள்ளது. இதன்மூலம் சாலைகள் பராமரிப்பு தெருவிளக்குகள் அமைப்பதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக நாங்கள் எங்களின் நன்றியை உளப்பூர்வமாக தெரிவித்துக் கொள்கிறோம். இந்த நடவடிக்கைகளின் போது எங்களின் கீழ்வரும் கோரிக்கைகளையும் நிறைவேற்றி தந்தால் மிகவும் உதவிகரமாகவும் தொழில் செய்ய ஒரு அமைதியான சூழ்நிலையும் உருவாகும். உற்பத்தியும், அரசுக்கு ஜிஎஸ்டி வரிவருவாயும், பெருகும்.

எங்களது தற்போதைய கோரிக்கைகள்:

தண்ணீர் வசதி அத்தியாவசியமானது பொதுக் கழிப்பறைகள். தெருவெங்கும் மரங்களை நடுதல். (சுமார் 1,000 மரக்கன்றுகள் நடக் கூடிய இட வசதி இருக்கிறது. கஜா புயலின் போது 50 வயதிற்கு மேலான சில நூறு மரங்கள் சாய்ந்து விட்டன. மரங்களை தொழிற்பேட்டைக்குள் அதிகம் வளர்த்தால் காற்று மாசுபாடு அடைவது மிகவும் குறையும். சிட்கோ நல்ல மண் வளம் நிறைந்த பூமி. இங்கு அருகிலேயே வனத்துறை இயங்குவதால் வனத்துறையும், சிட்கோவும் இணைந்து தேக்கு, செம்மரம், வேங்கை மற்றும் வேம்பு போன்ற மரங்களை வளர்க்கலாம்) சிட்கோவைச் சுற்றி வேலி அமைக்கப்படல் வேண்டும்.

நீரோடும் வாய்க்கால்கள் அடைபட்டு தண்ணீர் சாலைகளில் தேங்குவதால் சாலைகள் பழுதாகின்றன. எனவே வாய்க்கால்கள் சரிசெய்யப்பட வேண்டும். இங்குள்ள பொது கிணற்றை தூர்வாரி சுத்தம் செய்தால் தொழிற்சாலைகளுக்குத் தேவையான நீரை இக் கிணற்றிலிருந்து பெற்று பயன்படுத்திக் கொள்ள இயலும். மேல்நிலை தண்ணீர் தொட்டியை சீர்செய்து பொது பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். மழைநீர் சேகரிப்பு திட்டத்தை நிறைவேற்றும் செய்தல் வேண்டும். சிட்கோவில் உள்ள வேலிக் கருவை மரங்களை முற்றிலும் அழிக்க வேண்டும்.முன்புறம் கேட்டு வசதியும் காவல் பணியாளரும் வேண்டும். இவை அனைத்தும் இந்த வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற இந்த நேரத்திலேயே நிறைவேற்றிக் கொடுத்தால் எங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

# தஞ்சாவூரில் தேசிய தடுப்பூசி தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி



தஞ்சாவூர், மார்.21–
தஞ்சாவூரில் தேசிய தடுப்பூசி தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியை மேயர் சண். ராமநாதன் தொடங்கி வைத்தார்.

தேசியதடுப்பூசிதினத்தை முன்னிட்டு தஞ்சாவூர் அன்னை தெரசா மக்கள் சேவை மையம், ஸ்வஸ்தி கோத்ரேஜ் கிவ் இந்தியா தாரஸ் ஆகிய நிறுவனங்கள் தஞ்சாவூர் மாவட்ட சுகாதாரத் துறையுடன் இணைந்து தடுப்பூசி போட்டுக் கொள்வது, முக கவசம் அணிவது, தனிநபர் இடைவெளியை கடை பிடிப்பது போன்ற கருத்துக்களை வலியுறுத்தி சுகாதார விழிப்புணர்வு பேரணியை நடத்தியது. இந்த பேரணியை மாநகராட்சி மேயர் சண். ராமநாதன் கொடியசைத்து தொடங்கிவைத்தார்.துணை மேயர் அஞ்சுகம் முன்னிலை வகித்தார். இப்பேரணியில் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கண்டு விழிப்புணர்வு பதாகைகளை கொண்டு சென்றனர். மேலும் இப்பேரணியில் மாநகர நல அலுவலர் மருத்துவர் நமசிவாயம் ஸ்வஸ்தி, மண்டல திட்ட மேலாளர் ரத்தினகிரி, அன்னைதெரசா மக்கள் சேவை மையம் தலைவர் நிர்மலா, செயலாளர் இந்திரா, பொருளாளர் ஜெயலட்சுமி, மேலாளர் சரண்யா ஆகியோர் கலந்து கொண்டனர்



புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் ஆலங்குடி மெயின் ரோட்டில் கடைவதியில் அமைந்துள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகம் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக செயல்பாடு இன்றி இடிந்து விழும் நிலையில் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது. இதனை அகற்ற கோரி பலமுறை மனு கொடுத்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனை உடனடியாக அகற்றி ஏதேனும் விபத்து ஏற்படுவத முன்பாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பகுதி பொதுமக்கள் வியாபாரிகள் சங்கத்தினர் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.




# புதுக்கோட்டையில் ஒற்றுமை இளைஞர் நற்பணி மன்றத்தின் ஆறாம் ஆண்டு துவக்க விழா



புதுக்கோட்டை , மார்.21–
நியூ கோல்டன் நகர் திருவள்ளுவர் நகர் ஒற்றுமைஇளைஞர்நற்பணி மன்றத்தின் ஆறாம் ஆண்டு துவக்க விழாவையொட்டி பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

ஆறாம்ஆண்டுதொடக்க விழாவையொட்டி குழந்தைகளுக்கு சைக்கிள் சுலோரேஸ்,ஓட்டப்பந்தயம் பானை உடைத்தல் உள்ளிட்ட போட்டிகளும் பெண்களுக்கு நாற்காலி போட்டிகளும் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.விழாவில் அரபிக் கல்லூரி முதல்வர் சதக்துல்லா,திருவள்ளுவர் நகர் ஆயிசாமா பள்ளிவாசல் தலைவர் சர்புதீன், நகர்மன்ற உறுப்பினர் ராஜாமுகமது, முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் சந்திரசேகரன், கவிநாடு கிழக்கு முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர் ராஜசேகரன், மற்றும் முக்கிய பிரமுகர்களாக மின்வாரியம்சோமசுந்தரம், சாந்தி ஆப்டிகல்ஸ் நசீர், விஏடிசி ராஜேந்திரன், பாலசுப்பிரமணியன், திலிபன் செல்லப்பன், பாண்டியன், முத்து கிருஷ்ணன் மகேந்திரன், சிபிஐ பாண்டியன், யோகராஜ். முகமதுயூசுப். பாவா. இப்ராகிம். VRAஜாஹிர், சுதாகர், செல்வகுமார்,கருப்புதங்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சியை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்த மன்றத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் மணிகண்டன் , அமானுல்லா இருவரையும் சிறப்பு விருந்தினர்கள் பாராட்டுக்கள் தெரிவித்தனர்.

# திருநாவலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில், பள்ளி மேலாண்மைக் குழு விழிப்புணர்வு கூட்டம்



கள்ளக்குறிச்சி மார்.21_
கள்ளக்குறிச்சி மாவட்டம், அரசுப் பள்ளிகளின் முன்னேற்றம் மற்றும் அதன் செயல்பாடுகளை மேலாண்மை செய்வதற்காகவும், இலவச கட்டாயக் கல்வி உரிமை சட்டத்தின் படியும்,பள்ளி மேலாண்மைக்குழு ஏற்படுத்தப்பட்டது. பள்ளிக் கல்வித்துறை அரசாணையின்படி, பள்ளி மேலாண்மைக் குழுவை 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை மறுகட்டமைப்பு செய்யவேண்டும்.

அந்த வகையில் தமிழகத்தில்உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் பெற்றோர்களிடம், பள்ளி மேலாண்மைக் குழு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பள்ளி மேலாண்மைக்குழு கூட்டம், அந்தந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இதன் ஒரு பகுதியாக,கள்ளக்குறிச்சி மாவட்டம், திருநாவலூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில், பள்ளி மேலாண்மை குழு விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது, இக்கூட்டத்திற்கு பள்ளி தலைமை ஆசிரியை இளங்கோதை தலைமை தாங்கினார், சிறப்பு அழைப்பாளராக திருநாவலூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் சாந்தி இளங்கோவன் கலந்து கொண்டார்,

பள்ளியின் உதவி தலைமை ஆசிரியர்கள் பாலகுரு, சத்தியமூர்த்தி, கலைச்செல்வி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் இக்கூட்டத்தில் பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள், பெற்றோர்கள் மற்றும் பள்ளியின் ஆசிரியர்கள் ராஜசேகரன், ஜெய்சங்கர், பாத்திமாபேகம், வாசுதேவன் உடற்கல்வி ஆசிரியர் அன்புசோழன் உள்ளிட்ட இருபால் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

# சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்க சிறப்பு கூட்டம்



புதுக்கோட்டை மார்.21–
சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்கசிறப்பு கூட்டம் சங்க தலைவர் மாருதி கண.மோகன்ராஜா தலைமையில் மாருதி கார் கேர் வளாகத்தில் நடைபெற்றது.

சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்கசிறப்பு கூட்டம் சங்க தலைவர் மாருதி கண.மோகன்ராஜா தலைமையில் மாருதி கார் கேர் வளாகத்தில் நடைபெற்றது முன்னதாக வருகை தந்த அனைவரையும் பொருளாளர் C.பிரசாத் வரவேற்றார். சென்ற மாத அறிக்கையினை துணைத் தலைவர் இப்ராஹிம் பாபு வாசித்தார். கூட்டத்தில், நகராட்சி தேர்தலில் வெற்றி பெற்ற நகர்மன்ற தலைவர் திலகவதி செந்தில், துணைத்தலைவர் லியாகத் அலி, மற்றும் வெற்றி பெற்ற நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டது.

தஞ்சாவூரிலிருந்து புதுக்கோட்டைக்கு புதிதாக இரயில் தடம் அமைக்க ஆரம்பிக்கட்ட ஆய்வு முடிந்துவிட்ட நிலையில் உடனடியாக அமைக்க கோரி மக்களவையிலும் மற்றும் மாநிலங்களவையிலும் குரல் கொடுத்து பேசிய திருச்சி பாராளுமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசருக்கும், மாநிலங்களவை உறுப்பினர் அப்துல்லாவுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

புதுக்கோட்டை நகராட்சியை மாநகராட்சியாக மாற்றிட மிக முனைப்பாக செயல்பட்டுகொண்டுள்ள சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதிக்கும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதனுக்கும் மாவட்ட பொறுப்பாளர் கே.கே. செல்லபாண்டியனுக்கும் புதுக்கோட்டை சட்ட மன்ற உறுப்பினர் வை.முத்துராஜாவுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

புதுக்கோட்டை நகரின் சாலைகளில் போக்குவரத்து நெரிசல் அதிகம் காணப்படுவதால் பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள் மிகப்பெரிய பாதிப்புக்கு உள்ளாவதுடன் மட்டுமின்றி தொடர் விபத்துகளும் ஏற்படுகிறது. அவசர காலங்களில் ஆம்புலன்ஸ் வாகனங்கள் செல்ல வழியில்லாமல் தவிக்கும் நிலை ஏற்படுகிறது இதை சீரமைக்கும் வகையில் மாவட்ட நிர்வாகம் புதுக்கோட்டை கீழராஜவீதியில் போக்குவரத்து நெரிசலை முற்றிலும் தவிர்க்கும் வகையில் அனைத்து வாகனங்களும் ஒருவழிப் பாதையில் செல்லும் வகையில் கீழராஜவீதியையும் அதேபோல அருகிலுள்ள கீழ2ஆம் வீதியையும் ஒரு வழிப் பாதையாக மாற்றி வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வரும் அனைத்து வாகனங்களும் கீழ2ஆம் வீதியில் சென்று தெற்கு 4ஆம் வீதி வழியாக செல்லும் வகையில் முற்றிலும் ஒருவழிப் பாதையாக மாற்றியும் தெற்கிலிருந்து வடக்காக செல்லும் வாகனங்கள் அண்ணா சிலையிலிருந்து கீழராஜவீதி வழியாக சென்று பிருந்தாவனம் சென்றடையுமாறு ஒரு வழிப்பாதையாக மாற்றியும் உத்தரவிட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

அண்ணா சிலையிலிருந்து மேற்கு நோக்கி செல்லும் தெற்கு 4ஆம் வீதி சாலையை தண்டபாணி ஆலயம் வரை ஒருவழிப்பாதையாக மாற்றுவதோடு மற்றுமின்றி (NO PARKING ZONE) ஆக மாற்றம் செய்து அறிவிப்புப் பலகையும் வைக்க வேண்டும். பழைய பேருந்து நிலையத்திலிருந்து ஆலங்குடி செல்லும் சாலையில் வேகத்தடை அமைக்க வேண்டும்.

புதுக்கோட்டை நகருக்குள் செல்லும் தனியார் பேருந்து அதிவேகமாக செல்வதை கட்டுப் படுத்த வேண்டும். தஞ்சாவூரிலிருந்து புதுக்கோட்டை வரும் பேருந்துகள் மற்றும் லாரிகளுக்கு மாற்று வழிப்பாதை ஏற்படுத்தி தர வேண்டும். மாவட்ட விளையாட்டு மைதானத்தின் வாசலில் வேகத்தடை அமைக்க வேண்டும். போன்ற கோரிக்கைகளை நிறைவேற்றி தருமாறு மாவட்ட நிர்வாகம், நகராட்சி நிர்வாகம், காவல் துறை, மற்றும் சம்மந்தப்பட்ட துறைகளுக்கு கோரிக்கை மனு அளிப்பது என்று ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் கூட்டத்தில் சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் சந்திரசேகர், துணை செயலாளர் ராஜாமுகமது, சிவக்குமார், முகமது அப்துல்லா, விளையாட்டு ஆசிரியர் முத்துராமலிங்கம் முன்னிலை வகித்தனர். நிறைவாக செயலாளர் ஆரோக்கியசாமி நன்றி கூறினார்.

Owned & Published by S.Sivasakthivel, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: K.selvaraj Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: S.Sivasakthivel. Phone:04322-261577.
Chennai Office: Chief Reporter S.Kadar Hussain, ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com

21.03.2022 ❖ வரலாறு

# திருமருகல் ஒன்றியத்தில் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம்

நாகப்பட்டினம், மார்.21–



நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியத்தில் உள்ள அரசு பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு செய்தல் சார்ந்த பெற்றோருக்கான விழிப்புணர்வு கூட்டம் நடைப்பெற்றது.

திட்டச்சேரி அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற கூட்டத்திற்கு பள்ளியின் தலைமையாசிரியர் கலாராணி தலைமை தாங்கினார். இதில் திட்டச்சேரி பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் முகம்மது சுல்தான், சுல்தான் ரித்தாவுதீன், செய்யது ரியாசுதீன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். அதேபோல் புறாக்கிராமம் மேல்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியர் மாணிக்கவாசகம் தலைமையிலும், திருமருகல் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் நிர்மலாராணி தலைமையிலும் பள்ளி மேலாண்மைகுழுகூட்டம் நடைபெற்றது.

இதில் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர்கள், சங்க நிர்வாகிகள், ஆசிரியர்கள் ,பெற்றோர்கள் கலந்து கொண்டனர். அதேபோல் திருமருகல் ஒன்றியத்தில் 6 மேல்நிலைப்பள்ளிகள், 7 உயர்நிலைப்பள்ளிகள், 82 தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பள்ளி மேலாண்மை குழு கூட்டம் நடைபெற்றது.

# உ.பி ரயில் நிலையத்தில் பெண்ணுக்கு நடந்த கொடூரம்

உ.பி, மார்.21–

உத்தர பிரதேசத்தில் ரயிலுக்கு காத்திருந்த போது கணவன் தின்பண்டம் வாங்க போன நேரத்தில், மனைவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரபிரதேசத்தின் பிரதாப்கார் மாவட்டத்தில் உள்ள ரயில் நிலையத்திற்கு ரயில் ஏறுவதற்காக கணவன் மனைவி இருவரும் வந்துள்ளனர். ரயில் வர தாமதமானதால் அவர்கள் இருவரும் காத்திருப்பு அறையில் இருந்துள்ளனர். அந்த பெண்ணின் கணவர் சாப்பிட தின்பண்டம் வாங்கி வருகிறேன் என்று மனைவியிடம் கூறி விட்டு சென்றுள்ளார். சிறிது நேரத்தில், காத்திருப்பு அறையில் உள்ள கழிவறைக்கு அந்த பெண் சென்றுள்ளார். இதனை கவனித்த கழிவறையை தூய்மை செய்யும் ஊழியர் யாருக்கும் தெரியாமல் கழிவறைக்குள் நுழைந்துள்ளார்.

கழிவறைக்குள்ளே சென்று பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். அந்த ஊழியர் இதன் பின்னர் ரயில் நிலையத்தில் இருந்து தப்பியோடி விட்டார். நடந்த சம்பவம் பற்றி தனது கணவரிடம் அந்த பெண் கூறி அழுதுள்ளார். கணவன் மனைவி இருவரும் நிகழ்ந்த சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். காத்திருப்பு அறையின் கழிவறையில் நடந்த சம்பவம் பற்றி அந்த பெண் எங்களிடம் கூறினார். அந்த விவரங்களை நாங்கள் சேகரித்து கொண்டோம். தேவையான அனைத்து விசாரணை நடைமுறைகளையும் நாங்கள் மேற்கொள்வோம் என காவல்துறை அதிகாரி அபய் பாண்டே தெரிவித்துள்ளார். ரயிலுக்கு காத்திருந்த இடத்தில் கணவன் தின்பண்டம் வாங்கச் சென்ற இடைவெளியில் அவரது மனைவிக்கு நடந்த இந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

திண்டுக்கல்லில் 30ஆண்டுகளுக்கு முன்பு படித்த

# அரசு பள்ளி மாணவர்கள் கலந்து கொண்ட சங்கமம் சந்திப்பு நிகழ்ச்சி



திண்டுக்கல் , மார்.21–

திண்டுக்கல் பழனி சாலை உள்ள அரசு பள்ளியில் படித்த முன்னாள் மாணவர்கள் 30 ஆண்டுகள் கழித்து சந்திக்கும் சங்கமம் நிகழ்ச்சி திண்டுக்கல் எம் எஸ் பி பள்ளி அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் மற்ற மாநிலங்களிலிருந்தும் பெங்களூர், மும்பை மற்றும் ஓமன், கத்தார், தாய்லாந்து போன்ற நாடுகளில் இருந்தும் இந்தப் பள்ளியில் படித்த மாணவர்கள் குடும்பத்தினரோடு கலந்து கொண்டு தங்களது அன்பை வெளிப்படுத்தினர்.

இந்நிகழ்வு குறித்து சங்கமம் ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவிக்கையில், 1988–ல் 10 ஆம் வகுப்பு பயின்ற மாணவர்கள் சந்திக்கும் இந்த நிகழ்ச்சியை நடத்துவதற்கு ஒரு மாத காலம் திட்டமிட்டு நண்பர்களை ஒருங்கிணைத்து, தங்களுக்கு கற்றுக்கொடுத்த ஆசிரியர் பெருமக்களை அழைத்து அவர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக நடைபெறும் நிகழ்ச்சிக்கு "அமுதசுரபி" என்று பெயர் வைத்துள்ளோம்.

மேலும் 10 ஆம் வகுப்பு படிக்கும் பொழுது எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தோமோ, அதே மகிழ்ச்சியை தற்போது உணர்கிறோம். பள்ளிப்பருவ நண்பர்கள் அனைவரையும் ஒரே இடத்தில் பார்த்து ஆனந்தம் அடைகிறோம். மேலும் கற்றுத் தந்த ஆசிரியர்களை நினைவு கூறும் விதமாக அவர்களை அழைத்து மேடையில் அமர வைத்து மரியாதை செய்தது எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. என்று கூறினார். இதில் கலந்து கொண்ட முன்னாள் மாணவர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் விளையாட்டு போட்டி நடத்தி தங்களது மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர்.

இலங்கை யாழ்ப்பாணத்தில் கந்தரோடை விகாரைக்கு செல்ல

# பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால், அங்கு செல்வதை அந்நாட்டு பிரதமர் மகிந்த ராஜபக்ச தவிர்ப்பு

இலங்கை மார்.21–



இலங்கை யாழ்ப்பாணத்தில் கந்தரோடை விகாரைக்கு செல்ல பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால், அங்கு செல்வதை அந்நாட்டு பிரதமர் மகிந்த ராஜபக்ச தவிர்த்து கொண்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை பிரதமர் மகிந்த ராஜபக்ச இரண்டு நாட்கள் பயணமாக யாழ்ப்பாணம் சென்றுள்ளார். தொடர்ந்து அங்குள்ள மத வழிபாட்டு தலங்களுக்கு சென்ற அவர், யாழ்ப்பாணம் கந்தரோடை விகாரைக்கும் சென்று வழிபட திட்டமிட்டிருந்தார். இந்நிலையில், கந்தரோடை விகாரையில் புதிய கட்டடங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்ட இருப்பதாக செய்தி வெளியானதால், அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்களும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் கந்தரோடை விகாரைக்கு செல்வதை அவர் தவிர்த்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



**தமிழகமுதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணைப்படியும் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி உத்தரவின் பேரிலும் "பள்ளி மேலாண்மை குழு கூட்டம்" அனைத்து அரசுப்பள்ளிகளில் நடத்தப்பட வேண்டும் என அறிக்கை விடுத்திருந்த நிலையில் திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அடுத்த அரட்டவடி அரசு மேல்நிலைப்பள்ளியில் பணிபுரியும் தலைமையாசிரியர் சதாசிவம் தலைமையில் பள்ளி மேலாண்மை குழு கூட்டம் நடைபெற்றது. அதில் அந்தப் பள்ளியில் பயிலுகின்ற மாணவ மாணவியர்களின் பெற்றோர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். அவர்களை பள்ளியில் பணிபுரியும் இரும்பால் ஆசிரியர்களின் சார்பில் வரவேற்று மாணவர்களின் கல்வி வளர்ச்சி பற்றியும், பள்ளியின் மேம்பாட்டை பற்றியும் கலந்துரையாடல் செய்தனர்.**

# சப் இன்ஸ்பெக்டரை கொலைமிரட்டல் விடுத்த ரவுடி

சீர்காழி, மார். 21–



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி போலீஸ் நிலையத்தில் சிறப்பு சப் இன்ஸ்பெக்டராக அர்ஜுனன் என்பவர் பணியாற்றி வருகிறார். இவரிடம் கொள்ளிடம் அருகே தைக்கால் மதகடி தெருவை சேர்ந்த ராஜேந்திரன் மகன் மணிமாறன் (வயது 31) என்பவர் தன்னை நேற்று முன்தினம் செங்கமேடு அருகில் மோட்டார் சைக்கிளில் வரும்பொழுது அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் தன்னை வழிமறித்து கொலை மிரட்டல் விடுத்ததாக சீர்காழி காவத்தில் புகார் செய்தார்.

புகாரின் அடிப்படையில் சீர்காழி போலீசார் விசாரணைக்காக கொள்ளிடம் தைக்கால் பகுதியைச் சேர்ந்த கலைவாணன் என்கின்ற செந்தில் என்பவரை செல்போனில் அழைத்துள்ளார். அப்போது தொலைபேசியில் சிறப்பு சப் இன்ஸ்பெக்டரை ஆபாசமாக பேசிய செந்தில் கடுமையாக திட்டி கொலை மிரட்டல் விடுத்தார். மேலும் தன்னை இனிமேல் விசாரித்தால் அரை மணி நேரத்தில் குடும்பத்தோடு காலிசெய்துவிடுவேன் என கடுமையாக பேசி மிரட்டி உள்ளார். இதனையடுத்து ரவுடி செந்தில் மீது சிறப்பு சப் இன்ஸ்பெக்டர் அர்ஜுனன் சீர்காழி காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

புகாரின் பேரில் சீர்காழி போலீஸ் துணை சூப்பிரண்டு லாமெக் உத்தரவின் பேரில் சீர்காழி போலீஸ் இன்ஸ்பெக்டர் மணிமாறன், சப்-இன்ஸ்பெக்டர் அசோக்குமார் மற்றும் போலீசார் ரவுடி செந்தில் மீது காமக் குரோதம் ஆக ஆபாச வார்த்தையில் திட்டியது, கொலை மிரட்டல் விடுத்தல், பணி செய்ய விடாமல் தடுத்தல் உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து தலைமறைவான ரவுடி செந்திலை தேடி வருகின்றனர்.

இச்சம்பவம் சீர்காழி பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. மேலும் விசாரணைக்கு செல்போனில் அழைத்த சப் இன்ஸ்பெக்டர் அர்ஜுனனை ஆபாசமாக திட்டி கொலை மிரட்டல் விடுத்த செய்தி சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

# மயிலாடுதுறையில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டட கட்டுமானப் பணிகளை அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு

மயிலாடுதுறை, மார்–21;



மயிலாடுதுறை மாவட்டம், மன்னம்பந்தல் ஊராட்சி பால் பண்ணை அருகில் ரூ.114.48 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக மற்றும் பிற அரசு துறை அலுவலக கட்டட கட்டுமானப் பணிகளின் தரத்தினை மாண்புமிகு பொதுப்பணித்துறை (கட்டடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஞாயிற்றுக்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வுக்குபின் அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழகம் முழுவதும் எண்ணற்ற பல்வேறு திட்டங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார்கள். மாவட்டங்களில் அரசு துறைகள் சார்ந்த அலுவல்கள் விரைவாக நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மயிலாடுதுறை மாவட்டத்தில் 19.01.2022 அன்று புதிய மாவட்ட ஆட்சியர் மற்றும் பிற அரசு துறை அலுவலக கட்டடம் கட்டுமானப் பணிகளை காணொலி காட்சி மூலம் அடிக்கல் நாட்டினார்கள். மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டுமானப் பணிகளை விரைந்து முடிக்கவும், தரத்தினை ஆய்வு செய்யவும் நான் நேரில் பார்வையிட வந்துள்ளேன். மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டுமானப் பணிகள் ரூ.114.48 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு. 18 மாதங்களில் கட்டடப் பணிகள் முடிக்கப்பட வேண்டும். அபிராமி கன்ஸ்டரக்ஸன் & இன்ஜினியரிங் என்ற ஒப்பந்த நிறுவனம் இப்பணிகளை செய்து வருகிறது.

பொதுவாக வட மாவட்டங்களில் கட்டங்கள் விரைந்து கட்டி முடிக்கப்படுவதற்க்கு, மண்ணின் தரம் உறுதியாக இருக்கும். டெல்டா மாவட்டங்களில் மண் சற்று தளர்ந்திருக்கும். இப்புதிய கட்டடத்தில் 35 துறைகளும், பல்வேறு துணை மற்றும் சார்பு துறைகளும் என 60-க்கும் மேற்பட்ட துறைகள் செயல்படவுள்ளது. மழைகாலங்களில் பணி செய்ய முடியாத சுழ்நிலையில் உறுவாகும் அதன் அடிப்படையில் ஒப்பந்தம் கோரப்பட்டு பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது. வாரம் ஒருமுறை பணிகளின் நிலவரம் குறித்து மாவட்ட ஆட்சியர் அறிக்கை வழங்கவேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளேன், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் தரைதளம் மற்றும் 7 அடிக்குமாடி தளங்கள் கட்டப்படவுள்ளது. இதன் மொத்த பரப்பளவு 26,024 சதுர.மீட்டரும், 2,80,018 சதுர அடி ஆகும். மொத்தமுள்ள 21.17 ஏக்கர் பரப்பளவில் 15.24 ஏக்கர் பரப்பளவில் கட்டுமானப் பணிகள் நடைபெறவுள்ளது.

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகமுகப்புதோற்றம் மற்றும் ஆர்க்கிடேக்சர் வரைபடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முடிவு செய்துள்ளார்கள். அதன்படி முகப்பு தோற்றம் அமையவுள்ளது. மயிலாடுதுறை மாவட்ட தலைநகரம் மற்றும் திருவாரூர் மாவட்ட தலைநகரம் ஆகிய இரண்டையும் இணைக்கும் 36 கி.மீ தூரம் உள்ளது. சென்னை–கன்னியாகுமரி சிறப்பு திட்டத்தில், இரண்டு மாவட்டங்களையும் இணைக்ககூடிய (மயிலாடுதுறை – திருவாரூர்) நான்கு வழி சாலைஅமைக்கடெண்டர் கோரப்படவுள்ளது. இரண்டு ஒப்பந்ததாரர்களிடம் டெண்டர் கோரப்படும். ஒரு டெண்டர் ரூ.105 கோடி மதிப்பீட்டிலும், மற்றொன்று ரூ.103 கோடி மதிப்பீட்டும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இச்சாலை பணிகளை விரைவுபடுத்த நிலம் கையகப்படுத்தவுள்ளோம், இத்திட்டத்திற்கு இதுவரை 6 கிராமங்களில் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. தரமான சாலைகள் அமைப்பட வேண்டும் என்பதற்க்காக ஒப்பந்தாரர்களுடன் கூட்டம் நடத்தினேன். தரமான சாலைகளை அமைக்க உத்தரவு பிறப்புபிக்கப்பட்டுள்ளது. தரமாக சாலை அமைத்தால் தான் பொது மக்கள் பயன்படுத்த முடியும்.

நான் எப்போது வெளி ஊர்களுக்கு சென்றாலும் குவாலிட்டி கன்ட்ரோல் பரிசோதனை செய்யும் இயந்திரம் எனது வாகனத்தில் இருக்கும், நேற்று சென்னையிலிருந்து சாலை வழியாக வரும்போது உளுந்தூர்பேட்டை, பெரம்பலூர் வரும் சாலையின் தரம் குறித்து ஆய்வு செய்தேன். இரவு 7 மணியளவில் அரியலூர் மாவட்டம் திருமானூர் பாலம் கட்டும் பணிகளை தரமாக கட்டப்பட்டு வருகிறதா என ஆய்வு செய்தேன். ஞாயிற்றுக்கிழமை காலை மயிலாடுதுறை வருவதற்கு 3 கி.மீ. தூரத்திற்க்கு முன்பு அனைத்து சாலைகளும் செப்பணிப்பட்டுள்ளதா என ஆய்வு செய்தேன்.

1954–ஆம் ஆண்டு நெடுஞ்சாலைதுறைக்கு சொந்தமான ஆய்வுகம் உள்ளது. அதேபோல் பொதுபணித்துறைக்கும் சொந்தமான ஆய்வுகம் உள்ளது. 48 கிரேடு சிமென்ட் என்பதை மாற்றி 53 கிரேடு சிமேன்ட் பயன்படுத்தப்படுகிறது. ஒரு கட்டடம் கட்டுவதற்க்கு முன்னாள் கட்டடத்தின் மண் பரிசோதனை, நிலத்தடி நீர் பரிசோதனை, எம் சாண்ட் பரிசோதனை போன்ற பரிசேதனைகள் செய்யப்பட்ட பின்னரே கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைக்கும் வரை சிறப்பாக கட்டி முடிக்கப்படுகிறதா என நேரில் ஆய்வு செய்வேன். இவ்வாறு மாண்புமிகு பொதுப்பணித்துறை (கட்டடங்கள்). நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் தெரிவித்ததார்.

இவ்வாய்வின் போது மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா, அரசு தலைமை கொறடா கோவைசெழியன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராமலிங்கம், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ். ராஜ்குமார், பொதுபணித்துறை முதன்மை தலைமை பொறியாளர் (கட்டடம்) (சென்னை) ஆர்.விஸ்வநாத், பொதுபணித்துறை தலைமை பொறியாளர் (கட்டடம்) (திருச்சிராப்பள்ளி மண்டலம்) எல். ரவிச்சந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் சோ.முருகதாஸ், பொதுபணித்துறை கண்காணிப்பு பொறியளர் முத்துசெல்வி, நெடுஞ்சாலைகள்துறை கண்காணிப்பு பொறியாளர் கிருஷ்ணசாமி, பொதுபணித்துறை செயற்பொறியாளர் மோகனசுந்தரம், மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் பாலாஜி. பொதுபணித்துறை. நெடுஞ்சாலைகள்துறை சார்ந்த மற்றும் பல்வேறு அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

# சர்வதேச திரைப்பட விழாவில், யாரும் எதிர்பாராத வகையில் சர்ப்ரைஸாக தோன்றி மாஸ் என்ட்ரி கொடுத்த நடிகை பாவனா

கேரளா மார்.21–



கேரளாவில் துவங்கியுள்ள சர்வதேச திரைப்பட விழாவிற்கு, யாரும் எதிர்பாராத வகையில், 5 வருடங்களுக்குப் பிறகு சிறப்பு விருந்தினராக வந்து மாஸ் என்ட்ரி கொடுத்த நடிகை பாவனாவுக்கு, ரசிகர்கள், பிரபலங்கள் எழுந்து நின்று கரகோஷம் அளித்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.

கடந்த 2017-ல் நடந்த விரும்பத்தகாத நிகழ்வுகளுக்குப் பிறகு, நடிகை பாவனா சுமார் 5 ஆண்டுகளாக மலையாள திரையுலகில் நடிக்கவில்லை. பொது நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளவில்லை. இதற்கிடையில் கடந்த 2 நாட்களுக்கு முன்னர், பாவனா 'Ntikkakkakkoru Premondarnn' என்கிற மலையாளப் படத்தில் நடிக்கவுள்ளதாக அறிவித்தார்.

இதையடுத்து பல தரப்பில் இருந்தும் அவருக்கு வாழ்த்துகள் குவிந்தவண்ணம் இருந்தன. மலையாளத்தில், கடந்த 2017-ல் வெளிவந்த 'ஆதம் ஜான்' என்கிற படத்தில் தான் பாவனா கடைசியாக நடித்திருந்தார். இந்நிலையில், கேரளாவில் துவங்கியுள்ள சர்வதேச திரைப்பட விழாவிற்கு, யாரும் எதிர்பாராத வகையில், 5 வருடங்களுக்குப் பிறகு சிறப்பு விருந்தினராக வந்து மாஸ் என்ட்ரி கொடுத்துள்ளார் நடிகை பாவனா.

கடந்த மார்ச் 18-ம் தேதி கேரளாவில் IFFK (International Film Festival Kerala) எனும் 26-வது கேரளா சர்வதேச திரைப்பட விழா தொடங்கியது. இதில், பாலிவுட் இயக்குநர் அனுராக் கஷ்யப் உள்ளிட்ட பிரபலங்கள் கலந்து கொண்டனர். ஆனால், நிகழ்ச்சி நிரலில் பாவனாவின் பெயரே இல்லாத நிலையில், யாரும் எதிர்பாராத வகையில் சர்ப்ரைஸ் என்ட்ரியாக உள்ளே நுழைய ரசிகர்கள் ஆரவாரம் செய்தனர்.

பாவனா வந்தபோது ரசிகர்கள் இடைவிடாமல் கரவொலியை எழுப்பி பாவனாவை வரவேற்பு செய்தனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி நடிகை பாவனா தொடங்கி வைத்த நிலையில், கேரளாவின் கலாசாரத் துறை அமைச்சர் ஷாஜி செரியன் பாவானாவை பாராட்டி பேசியிருந்தார். "கேரளாவின் ரோல் மாடல் நீங்கள்" என அவர் பாராட்டியதற்கு பாவனா நன்றி தெரிவித்தார்.

மேலும், பாவனா விழா நிகழ்வில் கலந்து கொண்ட காணொலியைப் பகிர்ந்து நடிகை பார்வதி மேனன், "வெல்கம் பேக் பாவனா. இது உங்களுக்குக்கான இடம். உங்கள் கதை. உங்களுடையது!" எனப் பதிவிட்டுள்ளார். 5 ஆண்டுகளுக்குப் பிறகு பாவானா பொது நிகழ்ச்சியில் கலந்து கொண்டது தொடர்பான வீடியோக்களும் படங்களும் தற்போது வைரலாகி வருகின்றன.



# புதுக்கோட்டையில் உள் விளையாட்டு அரங்கம் பயன்பாட்டிற்கு வருமா?

# பெண்களுக்கு 50 சதவீத இட ஒதுக்கீடு உயர் நீதிமன்ற நீதிபதி





# அடிப்படை வசதியில்லாத புதுக்கோட்டை சிட்கோ தொழிற்சாலை


சென்னை / புதுக்கோட்டை | 21.03.2022 | varalaruu.com | பக்கம்:5 | ரூ.5

புதுகை வரலாறு நாளிதழ்

புதுகை வரலாற்றில் இன்று

# பிறந்த நாள்



## எம். என். ராய்

### இந்திய அரசியல்வாதி

புதுகை வரலாறு நாளிதழ்

# நினைவு நாள்



## நிர்மலா ஸ்ரீவஸ்தவா

### இந்திய சமயத் தலைவர்

புதுகை

# வரலாறு

நாளிதழ்

## தமிழ்நாடு முழுவதும் தாலுக்காக்கள் மாவட்டங்கள் வாரியாக செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்

கல்வித்தகுதி +2- தமிழில் எழுத்துப் பிழையின்றி எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்

மாதம் ஒன்றுக்கு குறைந்தது ரூ.10 ஆயிரத்திற்கு விளம்பரங்கள் சேகரிக்க வேண்டும்

### விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

ஆசிரியர் - புதுகை வரலாறு : நம்பர் 1103,
பெரியார் நகர், ராஜகோபாலபுரம் போஸ்ட், புதுக்கோட்டை-3.
தொடர்புக்கு: 04322 261577

சம்பளம் தங்களின் உழைப்பை பொறுத்து வழங்கப்படும்